பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 | 23 ஜுன் 2018 | விதி : 106



**இதயங்களை வெல்லும் இராணுவத்தினர்**



**சாவு ருசி கண்ட பொலிஸார்**



**உளக்காயங்கள் தொடர்கின்றன**



**வண்ணார்பண்ணை**



# சத்தியசோதனை

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

சினிமாத் துறையில் நிலவும் பாலியல் தொல்லைகளைப் பற்றிப் பேசியிருக்கும் நடிகை அர்த்தனா பினு -

"உங்களின் சம்மதம் இல்லாமல் உங்களை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. மறுக்கத் தெரிந்தால் போதும். 'இல்லை' என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். இதைத் தாண்டித்தான் பெண்கள் முன்னேற வேண்டும்!" என்று கூறியிருக்கிறார்.



'அப்பா' 2 ஆம் பாகத்தை இயக்கவுள்ளார் சமுத்திரக்கனி. இந்தப் படத்தை எஸ்.பி.சரண் தயாரிக்கவுள்ளார்.

அப்பா படத்தின் முதல் பாகத்தின் தொடர்ச்சியாகவே இப்படம் வெளியாகிறது. கல்லூரியில் கதை நடப்பதாக களம் அமைக்கப்பட்டுள்ளது.



சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகும் 'சீமராஜா' படத்தின் படப்பிடிப்பு அனைத்தும் முடிவடைந்துவிட்டது.

வரும் விநாயகர் சதுர்த்தியன்று செப்ரெம்பர் 13 ஆம் திகதி படத்தை வெளியிடத் திட்டமிட்டு வேலைகள் நடக்கின்றன. ட்ரெயிலர், பாடல்கள் விரைவில் வெளியாகவுள்ளன.



விமல் - ஓவியா நடிக்கும் 'களவாணி 2' படத்தில் இடம்பெறும் ஒரு பாடலுக்காக பழைய மண் வீடு செட் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இதன் படப்பிடிப்பு நேற்றுடன் முடிவடைந்தது.



'விஜய் 62' படத்தைத் தொடர்ந்து யார் படத்தில் விஜய் நடிப்பார் என்ற அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. இந்நிலையில், விஜய்யை சந்தித்துள்ளார் இயக்குநர் விக்னேஷ் சிவன்.

இது தனிப்பட்ட முறையிலான சந்திப்பா, அடுத்த படத்தில் இருவரும் இணைகிறார்களா என்பது விரைவில் தெரியும்.



'விசுவாசம்' படத்தில் அஜித் மதுரைத் தமிழ் பேசி நடிக்கிறார். இதன் முதல் கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது.

இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு இந்த வாரம் தொடங்குகிறது. பாடல்கள் அனைத்தையும் இந்தியாவிலேயே படமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.


# புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 23 ஜூன் 2018 விதி : 106


# துகிலுரியப்பட்ட ஞானசார தேரர் கொதித்தெழுந்த பௌத்த குருமார்



கௌரவர்களின் அரச சபையின் நடுவே பாஞ்சாலியை நிறுத்தி அவளின் துகிலைக் களைந்து நிர்வாணமாக்கி தன் தொடையில் கொண்டு வந்து அமர்த்துமாறு தன் தம்பி துச்சாதனனுக்கு கட்டளையிட்டான் துரியோதணன். கண்ணனின் அருளால் உரிய உரிய சேலை நீண்டு கொண்டு போனதால் பாஞ்சாலியை நிர்வாணப்படுத்த முடியவில்லை. ஆனால் எந்தத் தொடையில் தன்னை இருத்த துரியோதனன் ஆசைப்பட்டானோ அந்தத் தொடையைப் பிளந்து, அதன் இரத்தத்தைக் கூந்தலில் பூசியே கூந்தல் முடிப்பதெனச் சபதம் செய்தாள் பாஞ்சாலி. அதில் வெற்றியும் பெற்றாள்.

அது மகாபாரதக் கதை.

இப்போது ஞானசார தேரருக்கு வெலிக்கடையில் காவியுடை உரியப்பட்டு "ஜம்பர்" வழங்கப்பட்டு விட்டது. பாஞ்சாலிக்கு உரிய உரியக் கண்ணன் சேலை கொடுத்ததுபோல் தேரரின் கண்ணனான கோத்தா காவியுடை கொடுக்கவில்லை. எனவே தேரர் காவி களைந்து ஜம்பருக்குள் புகுந்து கொண்டார்.

சிங்களப் பேரினவாத நாயகனாக வலம்வரும் ஞானசார தேரரின் துகிலுரிவு கொழும்பில் சில இனவாத அமைப்புக்களைக் கொதிக்க வைத்துள்ளது. போராடப் போவதாக மிரட்டியுள்ளனர்.

சில வருடங்களின் முன்பு கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் நுழைந்து அங்குள்ள பொருட்களுக்கு சேதம் விளைவித்ததுடன், குருவானவரின் அடி வயிற்றில் உதைத்து அவரின் குரு அங்கியைக் கழற்ற முயன்றதாக ஒரு வழக்கு இடம்பெற்றது.

அதில் பிரதான எதிரி ஞானசார தேரர், இப்போ அவருக்கே துகிலுரிப்பு.

**முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும்**

# இருளில் தள்ளப்படும் இளைய தலைமுறை

இலங்கையில் சிறுவர்கள், இளைஞர்கள் ஆகிய எதிர்கால மனிதவளம் படுமோசமான முறையில் பாதிக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக ஆட்சியாளர்களோ, அரசியல் வாதிகளோ அக்கறை காட்டு வதில்லை எனவும், சர்வதேச சிறுவர்கள், இளைஞர்கள் தொடர்பான நலன்புரி நிலையம் தனது ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிறக்கும் குழந்தைகளில் 17 வீதமானோர் 5 வயதை அடைய முன்னரே போசாக்கின்மை தொடர்பான நோய்களால் மரணமடைந்து விடுகின்றனர். 40 வீதமானோர் போசாக்கின்மையால் போதிய உடல், மன வளர்ச்சியை அடைய முடியாதவர்களாகியுள்ளனர்.

10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆரம்பக் கல்வியிலிருந்து 30 வீதத்தினரும் மிகுதியானோரில் 16 வீதத்தினர்



க.பொ.த. (சா/த) படிப்போரும் 16 வீதம் விலகி வருகின்றனர். உலக போசாக்கு மட்டத்தில் இலங்கையில் 60 வீதமாகக் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் அமைச்சர் சஜித் பிரேமதாச இலங்கையின் வருமானத்தில் 54 வீதம் 4 வீதமான செல்வந்தர்களிடையே போய்ச் சேர்கிறது எனவும் மிகுதியே மக்களிடமும் அரசாங்கத்துக்கும் போகிறதெனவும் தெரிவித்திருந்தார். இளைய தலைமுறை உருப்படமுடியுமா?


**முடியிழந்த போதும்
கொடி படுப்பதில்லை
அடி பணிந்து யார்க்கும்
அடிமை செய்வதில்லை
குடியிருந்த மண்ணில்
குருதி பாய்ந்த போதும்
மடி சுமந்த அன்னை
மண்ணின் தாகம் தீர்ப்போம்!**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்




வங்கியில் வாங்கிய கடன் கடைசி பாக்கித் தொகை கட்டும் போது


Voir la traduction

























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## சத்தியசோதனை நமக்கும்தான்

**எது** நடக்கக்கூடாது - நடந்திருக்காது என்று தமிழ் மக்கள் நினைத்தார்களோ...? எந்த நம்பிக்கையில் இன்னமும் உயிர்த் துடிப்புடன் - போராட்ட குணத்துடன் வாழ்கிறார்களோ...? அந்த அடிப்படை நம்பிக்கை தகர்ந்துள்ளது. சிலவேளைகளில் எந்த உண்மை ஊர்ஜிதம் ஆகிவிடக்கூடாது என்று தமிழர்கள் பதை பதைக்கிறார்களோ அதைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார் பசீர் காக்கா அல்லது காக்கா அண்ணை என அறியப்பட்ட மு.மனோகர்.

பசீர் காக்கா தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். அதையும் தாண்டி தலைவர் பிரபாகரனின் நண்பரும்கூட. இதை எல்லாம் தாண்டி இந்த மண்ணுக்காக - தமிழரின் விடுதலைக்காக தன்னையும் - மகளையும் போராட்டப் பாதையில் இணைத்தவர். இன்றும் கூட தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் - தமிழர்கள் உரிமைகளுடன் வாழ வேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சுபவர். இத்தகைய அவர் 'சத்தியசோதனை' கட்டுரையில் வெளியிட்டிருக்கும் தகவல்களை நாம் வெறுமனே புறமொதுக்கி விட முடியாது.

தமிழர்களின் விடுதலைக் குணம் வெறுமனே முகப் புத்தகத்துக்குள் அடங்கி விட்டது. எல்லோரும் முகப்புத்தகப் போராளிகளாகி விட்ட நிலையில், வெளிநாடுகளில் மிக மூத்த - நேர்மையான போராளிகளுக்கு எதிராகக் குழிபறிப்புக்கள் அதிகமாகி உள்ளன. தமிழினத்துக்காக வாழ்ந்த சிலர் இன்று வேறொரு முகத்தைக் காட்டத் தொடங்கி தமிழ் மக்களை மாயைக்குள் தள்ளி அவர்களை சுருட்டி வாழத் தலைப்பட்டுள்ளனர். இத்தகைய செயற்பாடுகள் அவர்கள் முன்னர் செய்த வரலாற்று கடமைகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வைக்கிறது.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு குற்றவியல் அமைப்பு அல்ல" என்று ஐரோப்பிய நாட்டின் நீதிமன்றம் ஒன்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பதானது சாதாரணமான விடயமல்ல. ஐரோப்பிய நாடுகளின் கொள்கையில் இந்தத் தீர்ப்பு மாற்றத்தைக் கொண்டுவரும் என்று கருதப்படக்கூடியது. இன்று விடுதலைப் புலிகள் செயலிழந்து போனாலும், அந்த அமைப்பில் இருந்தவர்கள் இன்றும் பல தேசங்களில் வாழ்ந்து கொண்டுதான் உள்ளனர். இது அவர்களை மட்டுமல்ல, தமிழ் மக்களையும் தலைநிமிரச் செய்யும் விடயமாகும். இந்தத் தீர்ப்பில்தான் தலைவரின் நண்பரும் புதிய புலிகள் அமைப்பின் காலத்தில் இருந்து செயற்பட்டவருமான குலத்துக்கு எதிராகக் குழிபறிப்புகள் நிகழ்ந்தமை அம்பலமாகியுள்ளது.

தமிழர்களை தரணியில் தலைநிமிரச் செய்தது நமது விடுதலைப் போராட்டம். ஆனால் அந்தப் போராட்டத்தின் முடிவு சோகமாகி விட்டது. ஆனால் இன்னமும் மக்கள் நம்பிக்கையுடன்தான் உள்ளனர். அந்த நம்பிக்கை தங்கள் தலைவன் மீது கொண்ட நம்பிக்கை. அந்த நம்பிக்கை தகர்ந்துவிடாது என்று நம்புவோம். சத்தியசோதனை அவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும்தான்...!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 07

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

கதறி அழுவதற்கு நேரமில்லை. குண்டு மழையில் இருந்து தப்ப வேண்டுமென்ற நோக்கம் மட்டுமே மூளையை உஷார்ப்படுத்திக் கொண்டிருந்தது. உற்றார், உறவினர், நண்பர்கள் என கதறி அழுது வேதனைகளை தணிக்க முடியவில்லை. ரதியக்கா எந்த இடம்? உண்மையில் அவரது நிஜப்பெயர் ரதிதானா? யார் அவர்? இடப்பெயர்வில் சந்தித்த ஒரு உறவு. கனகாலப் பழக்கமும் இல்லை. ஆனால் எவ்வளவு மனிதாபிமானி! விழுந்து விழுந்து உதவி செய்தார். இதோ பனை வடலிக்குள் அவருடைய தலை.

ரதி அக்கா எனக் கத்தியபடி கடந்து எழுந்து சனங்களோடு சனங்களாக ஓடத் தொடங்கினோம். கால்களுக்குள் மனித இரத்தமும் சதையும் கொட்டிக் கிடந்தது. நாங்களும் இப்படித்தான் சிதறிப் போகப் போகிறோமா? ஓடிக் கொண்டே என் மகளைத் தடவிப் பார்க்கிறேன். மண்ணைத் தவிர அவளுடம்பில் எந்த பாதிப்புமில்லை. அவள் அந்த அல்லோல கல்லோலத்திலும் பால் குடித்துக் கொண்டிருந்தாள். கவலை மறந்த உலகத்தில் வாழும் இந்தக் குழந்தை அதிர்ஷ்டசாலி என நினைத்துக் கொண்டேன். அவளை மூடியிருந்த துவாய் முழுவதும் மண் நிறைந்திருந்தது. நாங்கள் தப்பியதை நினைத்துப் பார்க்கிறேன். அதிசயமாகத்தானிருக்கிறது.

மகனின் முதுகில் இரத்தத்தோடு மனித தசைகளும் பறந்திருந்தன. என் உடுப்பையும் பரிசோதனை செய்தேன். மண் மட்டுமே அப்பிக் கிடந்தது. தந்தையும் மகனும் தப்பிப் பிழைத்தது கடவுள் அருள் தான். ஏனெனில் எங்களுக்கு முன்பாக சென்று ஷெல் விழுந்த இடத்திற்கு மிக நெருக்கமாக இருந்து தப்பித்துள்ளனர். அவர்கள் எங்களுக்கு முன்னிருந்த ஒரு மூடப்படாத கிடங்கில் படுத்த போது நானும் மகளும் இன்னொரு மூடப்படாத பதுங்குகுழியில் இறங்கியிருந்தோம். ஷெல் குத்திய சத்தத்துக்கு விழுந்து படுக்காமல் பயத்தில் தாறுமாறாக ஓடியவர்களே பலர் இறந்திருந்தனர்.

கணவரினதும் மகனினதும் சேட்களை கழற்றி எறிந்து விட்டு பெனியன்களுடன் ஓடி கரும்முள்ளி வாய்க்காலடியில் ஓய்வெடுத்தோம். ஷெல்கள் அவ்விடத்தில் விழ வாய்ப்பில்லை. துப்பாக்கியால் சுட்டு விழுத்தும் தூரத்தில் இராணுவத்தினர் இருந்தனர். போராளித் தங்கை ஒருத்தி அந்த இடத்தை தந்திருந்தாள். மூடிய காப்பை இழந்த பதுங்கு குழிக்கு மேல் துப்பாக்கி ரவைகள் துளைக்காத இரும்புத் தகடுகளைக் கொண்டதாக பதுங்கு குழி இருந்தது.

அந்த இடத்தில் கிடங்கொன்றைத் தோண்டினோம். மண்வெட்டிகள் தாராளமாக அந்த இடத்தில் கிடைத்தன. சிலவேளை போராளிகள் பயன்படுத்தியவையாகவும் இருக்கலாம். களைப்போடு களைப்பாக கிடங்கை வெட்டி தண்ணீர் ஊறும்வரை காத்திருந்தோம். அந்தப் போராளித் தங்கை குடிப்பதற்கு ஒரு எட்டு லீற்றர் நீர் கொள்ளத்தக்க கலனில் நீரைத் தந்திருந்தாள். அதில் தாகத்தைத் தீர்த்து வெறும் அரிசியில் கஞ்சியும் காய்ச்சினேன். சைக்கிளை விட்டுட்டு வாங்கோ உயிரைக் காப்பாற்றுவம் என்ற என் வேண்டுதலைக் கேட்காததால் சில சமையல் உபகரணங்களும் உடைகளும் எஞ்சியிருந்தன.

வெட்டிய கிடங்கில் நீர் ஊறத் தொடங்கியது. சற்றுத் தெளிய வர கணவரும் மகனும் குளித்து உடையை மாற்றினார்கள். போட்டிருந்த உடுப்புகளை வெட்டிப் புதைத்தார். நாங்கள் இரவானால்தான் குளிக்கலாம். திறந்த வெளியில் குளிக்கும் தைரியம் எனக்கிருக்கவில்லை. மகளை மெதுவாக குடிப்பதற்காக கொண்டு வந்த நீரில் சுட வைத்து குளிக்க வார்த்தேன். அவள் தறப்பாளுக்குள் கட்டிய ஏணைக்குள் உறங்கத் தொடங்கினாள்.

என்னுடைய நிலையை நன்குணர்ந்த அந்தப் போராளித் தங்கை கயல்மதி என்னையும் அவளது சகோதரியையும் அழைத்துக் கொண்டு பக்கத்து வீதியைக் கடந்து ஆலடிக்குப் பக்கத்தில் இருந்த கல் வீடொன்றிற்கு அழைத்துச் சென்றாள். அங்கு கட்டுக் கிணற்றில் தண்ணீர் தாராளமாகக் கிடந்தது. குளித்தபோது மனம் சுகமாக இருந்தது. பக்கத்தில் குளித்துக் கொண்டிருந்த கயல்மதியின் அக்காவிடம் ரதியக்காவின் நிலையைக் கூறினேன். நீரோடு நீராக கண்ணீர் கரைந்தோடியது.

கயல்மதி அழைத்துச்சென்ற அந்தக் கல் வீட்டில் காயப்பட்ட போராளிகளிருந்தனர். அவர்களுக்குத் தண்ணீர் அள்ளிக் கொடுக்க வேண்டிய தேவையை அவள் சொல்லாமல் சொல்லியிருந்தாள். காயப்பட்ட அந்தப் போராளிகள் ஒருவருக்கு ஒருவர் மிகவும் ஆறுதலாக இருந்தனர். எங்களுக்கும் அவர்களுக்கு சேவை செய்ய நல்ல வாய்ப்புக் கிடைத்தமை சந்தோசமே. எங்கள் ஒவ்வொருவருக்காகவுமே அவர்கள் எல்லையில் நின்று காயமடைந்தார்கள். எல்லோரும் போராளிகளுக்குரிய உடையில்லாமல் சாதாரண உடையிலேயே இருந்தார்கள். காயப்பட்ட போராளிகள் மட்டுமல்ல எல்லாப் போராளிகளுமே இறுதி நாட்களில் சீருடை அணியவில்லை. சாதாரணமாக மக்கள் அணியும் உடைகளுக்கு மாறியிருந்தனர். ரதியக்கா கூட ஒரு போராளியாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் தன் சொந்தப் பெயரையோ ஊரையோ குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை.

(சாட்சியம் நீளும்)



# இதயங்களை வெல்லும் இராணுவத்தினர்

■ யோக நாராயணன்



அண்மையில் முல்லை. மாவட்டத்திலுள்ள விசுவமடுப் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புப் படையின் முகாம் பொறுப்பதிகாரி பதவி உயர்வு பெற்று இடமாற்றமாகிச் சென்றபோது அவரின் பிரிவைத் தாங்க முடியாது மக்கள் சோகத்தில் துடிதுடித்ததாகச் செய்திகள் வெளிவந்தன. மக்கள் அவரைத் தோளில் தூக்கிக் கொண்டு செல்வதும் அவரின் பிரிவைத் தாங்காது கண்ணீர் விடுவதும், கதறியழுவதும் ஊடகங்களில் பக்கங்களை நிறைத்திருந்தன.

இந்தச் சிவில் பாதுகாப்புப் படையில் இணைந்துள்ளவர்கள் வேறுயாருமல்லர், கடந்த காலத்தில் ஆயுதப் படையினருக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்திப் போராடிய போராளிகள். இந்தப் போரில் அர்ப்பணிப்புடன் பங்கு கொண்டு இரத்தம் சிந்தியவர்கள்! அப்படியான போராளிகள் தற்சமயம் ஒரு படை அதிகாரியின் பிரிவுக்காக வேதனைப்படுகிறார்கள் என்றால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்பு வெளியே வந்தபோது வாழ்வின் அடுத்த கட்டத்துக்கு என்ன செய்வது எனத் தெரியாது தடுமாறிய நிலையில் அவர்கள் சிவில் பாதுகாப்புப் படையில் இணைக்கப்பட்டனர். இவர்களுக்கு ஓய்வூதியத்துடன் கூடிய ரூபா 30,000 சம்பளம் தற்போது வழங்கப்படுகிறது. இது பெயரளவில் பாதுகாப்புப் படை என அழைக்கப்பட்டாலும் அவர்கள் விவசாயம் உட்பட அபிவிருத்திப் பணிகளின் தொழிலாளர்களாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். சில படித்த பெண்கள் இராணுவத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

இப்படியானதொரு நிலையில் அந்த முகாம்களின் பொறுப்பதிகாரிகளாகப் பதவி வகிக்கும் படை அதிகாரிகள், முன்னாள் போராளிகளுடன் அன்பாகவும், சலுகைகளை வழங்கியும் செயற்படும்போது அவர்களின் நன்மதிப்பைப் பெறுவது சிரமமான காரியமாக இருக்கமுடியாது. இது விசுவமடுவின் பொறுப்பதிகாரியின் தனிப்பட்ட நடத்தை காரணமாக ஏற்பட்ட ஒரு நிலைமை என அலட்சியம் செய்துவிட முடியாது. இவையெல்லாம் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கைங்கரியங்கள் என ஆழ்ந்து அவதானிக்கும்போது புரிந்து கொள்ளமுடியும்.

வீட்டுத்திட்டங்களை அமைத்துக் கொடுத்தல், பாடசாலைகளுக்குக் கட்டடங்களை அமைத்தல், சுற்றுலா விடுதிகளை நடத்துதல், விவசாய, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடல் என இராணுவத்தினர் வடக்கில் பாதுகாப்புடன் சம்பந்தப்படாத விடயங்களில் ஈடுபட்டு வருவதை நாம் அவதானிக்க முடியும். அண்மையில் பலாலியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே வடக்கில் ஆயுதப் படையினர் பாதுகாப்புப் படையாகச் செயற்படவில்லை எனவும், ஒரு அமைதிப்படையாகவே செயற்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்திருந்தார்.

கடந்த வாரம் வவுனியாவிலுள்ள வேப்பங்குளம், ஈச்சங்குளம் ஆகியவற்றைப் புனரமைக்கும் ஒப்பந்தமும் வவுனியா அரச அதிபரால் இராணுவத்தினருக்கே வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒரு விழாவில் உரையாற்றிய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இப்படியாகப் பாதுகாப்புக்குத் தொடர்பற்ற பணிகளைச் செய்வதற்கு ஆயுதப் படையினருக்குப் பணம் எப்படிக் கிடைக்கிறதென்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டங்களில் எல்லாம் பாதுகாப்புச் செலவினமாகப் போர் காலத்தில் ஒதுக்கப்பட்டதைவிடக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும் ஆயுதங்கள், ஆயுதத் தளபாடங்கள் வாங்கவேண்டிய தேவை இல்லாத நிலையிலும் ஏன் பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கப்படுகிறது.

அதாவது வடக்கை முழுமையாக இராணுவமயப் படுத்துவது, அந்த நிலைமைக்குள் படையினர் வணங்குவதற்கான விகாரைகள், படையினரின் குடும்பங்களுக்கான வீடுகள், புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து அதில் பணியாற்றும் சிங்களவர்களுக்கான வீடுகள், மெல்ல மெல்ல வடகடலில் வாடி போட்டு மீன்பிடித்து ஊடுருவும் சிங்கள மீனவர்களுக்கு காலப்போக்கில் மீன்பிடிக் கிராமங்களை அமைத்தல் போன்ற வடக்கை சிங்கள, பௌத்தமயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உள்நோக்கம் உண்டென்பதை எவரும் மறந்துவிடமுடியாது.

எனவே படையினருக்கும், மக்களுக்குமிடையே திட்டமிட்ட வகையில் நல்லுறவுகளை ஏற்படுத்தி வடக்கை சிங்கள மயப்படுத்தப்படும் நடவடிக்கையை எதிர்ப்பின்றி மேற்கொள்ள - மேற்கொள்ளப்படும் சதியின் ஒரு பகுதி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். சிவில் பாதுகாப்பு அமைக்கப்பட்டு அதில் முன்னாள் போராளிகள் உள்வாங்கப்பட்டுக் கூடுதலான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை அன்பினால் அல்ல! வடக்கைச் சிங்கள மயமாக்குதலுக்கு எதிராக எழுச்சி பெறக்கூடிய முன்னாள் போராளிகளைத் தங்கள் காட்டுக்குள் வைப்பதற்காகவே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் அரசியல் தலைமைகள் இதை உணர்ந்து கொள்ளவோ - இதற்கு எதிராக மாற்று நடவடிக்கைகளை எடுக்கவோ தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. எமது அரசியல் தலைமைகள் முன்னாள் போராளிகள் தொடர்பாகவோ எமது மக்கள் சந்திக்கும் சாதாரண வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்பாகவோ எந்தவித அக்கறையும் காட்டாமையால் ஏற்பட்ட வெற்றிடத்தைப் பாவித்தே படையினர் மக்கள் மத்தியில் வேகமாக ஊடுருவி வருகின்றனர்.

இனியாவது தமிழ் தலைமைகள் நிலைமையை உணர்ந்து உடனடியாக மாற்று நடவடிக்கையில் இறங்காவிடில் தமிழ் மக்கள் என்றுமே அவர்களை மன்னிக்கப்போவதில்லை. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இணக்க அரசியல் நடத்திய தமிழ் தலைமைகள் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண - நேர்மையான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசியல் தீர்வைச் சொல்லிச் சொல்லியே இலவங்காயைக் காட்டி வந்தனர்.

இப்போது அந்த நம்பிக்கையும் இழக்கப்பட்ட நிலையில் எதிர்ப்பும் போராட்டம் - ஒத்துழையாமை - சர்வதேசத்திடம் முறைப்பாடு எனப் புலம்ப ஆரம்பித்துள்ளனர். தேர்தல் நெருங்கும்போது தமிழ் மக்களுக்கு இப்படியான கோஷங்களைக் கேட்டு நிறையவே உண்டு.

எனவே தமிழ் தலைமை அரசை நியாயப்படுத்தி தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலைக் கைவிட்டு உண்மையான உரிமைப் போராட்ட அரசியலில் களமிறங்க வேண்டும்.

# இத்தாலியில் பொட்டு அம்மான்?

■ மு.இராகவன்


பிரபாகரனும் பொட்டு அம்மானும் உயிருடன் இருக்கிறார்கள்... பிரபாகரன் உயிருடன் இல்லை, பொட்டு அம்மான் மட்டும் இருக்கிறார்... பொட்டு அம்மானும் உயிருடன் இல்லை... இப்படியாகப் பலவிதமான செய்திகளும் வதந்திகளும் அவ்வப்போது கிளம்பும். பிறகு, அதுவாகவே அடங்கியும் விடும்.

முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்தது மே மாதத்தில். விடுதலைப் புலிகளின் மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் நவம்பர் மாதம் நடக்கும். இதனால், மே மற்றும் நவம்பர் மாதங்களில் இதுபோன்ற வதந்திகள் அதிகமாகக் கிளம்பும். ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளின் தண்டனைக் குறைப்பு சம்பந்தமான விவாதங்கள் எழும்போதெல்லாம் இதுபோன்ற வதந்திகள், செய்திகளாக உலா வரும். சமீபத்தில் இதுபோன்ற ஒரு செய்தி உலா வந்தது.

'ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டும்' என்று சட்டமன்றத்தில் தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தை இந்திய ஜனாதிபதி நிராகரித்துவிட்டார். இந்தச் செய்தி வெளியான நாளில், பி.ஜே.பி-யின் மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிற்றர் பக்கத்தில், 'முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கியக் குற்றவாளி, இத்தாலியில் வசித்து வருகிறார்' என்று பதிவிட்டார். உடனே, சுவாமி யாரைச் சொல்கிறார் என்ற விவாதம் கிளம்பியது. பொட்டு அம்மானைத்தான் சுவாமி சொல்கிறார் என்று பலர் சொல்கிறார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 29 பேர் தவிர பிரபாகரன், பொட்டு அம்மான், குமரன் பத்மநாபன், அகிலா ஆகிய நான்கு பேரின் பெயர்களும் வழக்கில் இருந்தன. அகிலா யார் என்று இன்னமும் அடையாளம் காண முடியவில்லை. குமரன் பத்மநாபன், 2009 போருக்குப் பின்னால் கைது செய்யப்பட்டு, இலங்கை அரசின் பாதுகாப்பில் இருந்துவருகிறார். பிரபாகரன் கொல்லப்பட்டதற்குச் சாட்சியாக, சில வீடியோ காட்சிகளை வெளியிட்டது இலங்கை ராணுவம். ஆனால், விடுதலைப்புலிகள் அமைப்பின் உளவுத்துறை தலைவராக இருந்த பொட்டு அம்மான் இறந்து விட்டார் என்பதற்கான ஆதாரங்களை இலங்கை அரசு இன்னும் வெளியிடவில்லை. அதனால், பிரபாகரனைவிட பொட்டு அம்மான்மீதான மர்மம் குறித்தே பேசப்பட்டது.

'பொட்டு அம்மான் இறந்துவிட்டார்' என இலங்கை மறுத்திருந்தாலும், சில ஆண்டுகளுக்கு முன்பு 'பொட்டு அம்மான் தலைமையில் மீண்டும் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு இயங்கிவருகிறது' என எச்சரிக்கை விடுத்தது இன்டர்போல். மேலும், தேடப்படுவோர் பட்டியலில், பொட்டு அம்மானின் பெயரையும் சேர்த்தது. இந்த நிலையில்தான், சுவாமியின் டுவிற் முக்கியத்துவம் பெறுகிறது.




"இறுதிக்கட்டப் போரின்போது சில உதவிகள் பெறுவதற்காக வெளிநாடு சென்றதால், பொட்டு அம்மான் உயிர் தப்பிவிட்டார். தற்போது அவர், இத்தாலியில் தஞ்சம் அடைந்துள்ளார். அவர்தான், உலகம் முழுவதிலும் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை ஒருங்கிணைத்து மீண்டும் புலிப்படையை அமைத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'விடுதலைப் புலிகளின் எண்ணத்தை மீண்டும் நிறைவேற்ற சிலர் சில வேலைகளைச் செய்து வருகிறார்கள்" என்று இலங்கை ஜனாதிபதி சிறிசேன சமீபத்தில் சொன்னார். அது பொட்டு அம்மானை மனதில் வைத்துச் சொன்னதுதான். பொட்டு அம்மான் அப்படிச் செய்தால், அவருக்கு உதவி செய்ய புலம்பெயர்ந்த தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் பண உதவி செய்ய, அதன் மூலமாக ஆட்களைத் திரட்டும் காரியங்களும் நடக்கும். அதனால்தான், மத்திய உள்துறையும் உளவுத்துறையும் இந்த விஷயத்தில் சீரியஸாக கண்காணிப்பு காரியங்களைச் செய்து வருகிறது" என்று மத்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் சொல்கிறார்.

"கடந்த 15 நாள்களில், தமிழக முகாம்களில் இருந்த 32 பேர் இலங்கைக்குக் கள்ளத்தனமாக நாகை மாவட்டம், கோடியக்கரையிலிருந்து போயிருக்கிறார்கள். இதுபோல தமிழகத்திலிருந்து செல்லும் சிலர், இலங்கைக் கடற்படையிடம் சிக்குகிறார்கள். அப்போது, 'எங்கள் வீடு, நிலங்கள், உடைமைகள் யாவும் இலங்கையில் உள்ளன. அவற்றை வைத்து வாழ்வதற்காகத்தான் வருகிறோம்.

தமிழ்நாட்டில் எங்களுக்கு எவ்வித உரிமையும் தராமல்,

(18ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 42

# வண்ணார்பண்ணை



வண்ணை சிவன் கோயில்

யாழ்ப்பாண தேசத்திலுள்ள பழமைமிக்க பகுதிகளில் வண்ணார்பண்ணையும் முக்கியமான பிரதேசமாகும். இது தற்போதைய யாழ்ப்பாண நகரப் பகுதியில் அடங்கியுள்ளது. இந்தப் பகுதியில் நகர மத்திக்கு மிகவும் அண்மையில் வண்ணான்குளம் என அழைக்கப்படும் குளமொன்றும் உண்டு. இது மிக அண்மைக்காலம் வரை துணிசலவை செய்வதற்கு சலவைத் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. வண்ணம் + ஆர் + பண்ணை எனவும், வண்ணை + பண்ணை என்றவாறாகவும் இந்த இடப் பெயரைப் பிரித்து நோக்கலாம். வண்ணார் என்பதற்கு வண்ணந்தீட்டுவோர் (Painter's) சலவைத் தொழிலார் எனப் பொருள் காணலாம்.

வண்ணார்பண்ணை பகுதி யாழ். நகர் மத்திக்கு அண்மையில் தொடங்கி காங்கேசன் துறை வீதி, கஸ்தூரியார் வீதி என்னும் வீதிகளை அண்டிச் சுமார் ஒரு மைல் தூரம் வரை வியா பித்துள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் சாயம் போடுவோர் நல்ல நிலையில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அந்தக் கால வருமானத்துறையை நோக்கின் புலனாகும். தமிழ் அரசர் காலத்தில் அரச பணியின் பொருட்டுப் பல்வேறு தொழில் அடிப்படையிலான தொழில் சார் மக்கள் நல்லூர் அரச சிம்மாசனத்தின் அயலிடங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் குடிமனைகளும் கோயில்களும் தனித்தனியாக இருந்திருக்கின்றன. இந்தப் பின்னணியில் அரச பண்ணை யாளர்களாகிய வண்ணக்காரர் (வண்ணந்தீட்டுவோர்) வாழ்ந்த இடமே வண்ணார்பண்ணை எனவாயிற்று.

மேலும் யாழ்ப்பாண அரசர் காலத்தில் நல்லூர் தலைநகரமாயிருந்தபோது வண்ணார்பண்ணை பனங்கூடல்கள் நிரம்பிய சிற்றூராக இருந்ததாகத் தெரிகிறது. பின்னர் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை தங்களது நிர்வாக மையமாக மாற்றிக் கடற்கரையோரமாகக் கோட்டை ஒன்றையும், அருகில் தங்கள் வாழ்விடங்களையும் அமைத்துக் கொண்ட பின்னர் இந்தப் பகுதி படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

இந்த இடம் யாழ். நகரின் ஒரு பகுதியாதலால் செட்டிமார்களின் குடியிருப்புக்களும் பெரிதும் அமையலாயின. அவர்களுக்கு உரிமையானதே வண்ணார் பண்ணைச் சிவன் கோவில் ஆகும். இதனைச் செட்டியார் சிவன் கோயில் என்றும் கூறுவர். டச்சுக்காரர்களின் ஒப்புதலோடு 1796 ஆம் ஆண்டில் இந்தக் கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் (1658 -1796) சமயப்பொறை பின்பற்றப்பட்டமைக்கு இதனைச் சான்றாக கூறிக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்துச் செட்டிமார்களது வரலாறும் மரபுகளும் மேலும் இதனுடன் ஒப்பிட்டு ஆராயப்பட வேண்டியுள்ளது. வண்ணார்பண்ணைக்கு மேற்கே பண்ணைத்துறை அமைந்துள்ளது. பண்டை நாளிலே தமிழக மக்கள் திருப்பெண்ணையாறு மூலமாக வந்து இந்தத் துறையில் இறங்கியபோது தமது நாட்டுப் . பண்ணைத்துறை என்ற பெயரை இட்டு வழங்கியதாகவும் அறியப்படுகிறது.

இங்கு பழமை வாய்ந்த பெருமாள் கோயில், ஐயனார் கோயில், சிவயோக முனியப்பர் கோயில், காளி கோயில் என்பனவும் காணப்படுகின்றன.

இங்கு அறிவுப் பசி தீர்க்கும் நோக்கில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம், வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, யாழ். இந்துக் கல்லூரி என்பன காணப்படுகின்றன. இவ்வாறு தமிழ் இந்து மணம் கமழும் தேசமாக வண்ணார்பண்ணை திகழ்ந்து வருகின்றது.





வலர் பாடசாலை

# வாரப்பலன்

### மேடம்
உங்கள் செயல்களில் நேர்த்தி அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வாகனப்பயணம் இனிய அனுபவம் தரும். பூர்வ சொத்து பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

### துலாம்
அன்றாட வாழ்வில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணிகளை புதிய யுக்தியுடன் செயற்படுத்துவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதல்களை ஏற்பர்.

### ரிஷபம்
உங்கள் உற்சாகம் செயல்கள் மூலமாக வெளிப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறும். உறவினர்கள் அதிக அன்பு பாராட்டுவர். வியாபாரத்தில் வளர்ச்சி வரும்.

### விருச்சிகம்
நண்பரால் உதவி உண்டாகும். மனதில் தைரியம் மேலோங்கும். திட்டமிட்ட பணி இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். அன்றாட வாழ்வு சிறப்பாகும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நோய் தொந்தரவு குறையும்.

### மிதுனம்
மனதில் இருந்த குழப்பம் விலகும். பணவரவு அதிகம் பெறச் சந்தர்ப்பம் உருவாகும். புதிய வீடு வாங்குபவர்கள் ஆவணங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் கவனமாக இருக்கவும். பிள்ளைகளின் செயல் அறிவுபூர்வமாக அமைந்திடும்.

### தனுசு
எதிர்பார்த்த நன்மை எளிதாகக் கிடைக்கும். உடன்பிறந்தவர் உங்கள் நலனில் அக்கறை கொள்வர். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் வேலையில் முன்னேற்றம் காண்பர். தொழில், வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள்.

### கடகம்
உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும் புகழும் தேடி வரும். பிள்ளைகளின் படிப்பிலும், வேலையிலும் முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.


### மகரம்
இஷ்ட தெய்வ அருளால் காரியங்கள் நிறைவேறும். அன்றாட வாழ்வியல் சிறப்பாக இருக்கும். நண்பர் கேட்ட உதவியைச் செய்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும்.

### சிம்மம்
மனதில் புத்துணர்வு மேம்படும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தாய் வழி உறவினர்களிடம் அன்பு மலரும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். பிள்ளைகள் நல்ல எண்ணங்களுடன் செயற்படுவர்.

### கும்பம்
மனதில் இருந்த குழப்பம் விலகும். புத்துணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை ஏற்றுச் செயற்படுவர். ஆரோக்கியம் சீராகஇருக்கும். பகைவர் சிரமங்களால் விலகுவர்.

### கன்னி
மனப்பூர்வமாக வேலைகளில் ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வுகளால் மனதில் நல்ல மாற்றம் உருவாகும். புதிய வீடு வாங்க நல்யோகம் உண்டு. பிள்ளைகள் மனதில் ஆன்மிக எண்ணம் வளரும்.

### மீனம்
உங்கள் பேச்சில் ஆன்மிகக் கருத்து மிகுந்திருக்கும். அன்றாடப் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுடனான சந்திப்பு நன்மையை ஏற்படுத்தும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவர்.



கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஊடகக் கற்கை அலகு மாணவர்களால் நடத்தப்பட்ட ஒளிப் படக் கண்காட்சியின் போது...



கைத்தொழில் சாலைகளுக்கு உரிமம் வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி விளக்கமளிக்கும் செயலமர்வு ஒன்று அண்மையில் மட்டக்களப்புக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் கிராம மக்கள் காணிகளைத் தருமாறு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.




வட மாகாண சுகாதார அமைச்சர் பூநகரி பல்லவராயன் கட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு பயணம் செய்தார். அங்கு கடந்த சில மாதங்களாக மருந்து பற்றாக்குறையோடு பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதைப் பார்வையிட்டார்.



கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக் கற்கை அலகில் கற்கும் மாணவர்களால் “கனலி” சஞ்சிகை வெளியீட்டின்போது




சர்வதேச யோகாதினத்தை முன்னிட்டு யோகா நடைபவனியொன்று திருகோணமலையில் நடைபெற்றது.



ஈசாப் நீதிக் கதைகள்

# கெட்டிக்காரன் புளுகு

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் உற்சாகமாக சேவல் கூவியது. பலதடவை கூவியது.இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசியாக இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது, ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப்பார்த்து,

"சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாக நடந்து கொள்ள வேண்டும், சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே இறங்கி வா. இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது. இதைக் கண்ட நரி, என்ன சகோதரா!, ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது? என்று கேட்டது.

அதற்கு சேவல்,அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைக் கவனிக்கிறேன். அவ்வளவு தான் நரிக்கு உடல் நடுங்கி விட்டது, வேகவேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறி கிளம்பியது. சேவல், "அருமை சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது"

நரி "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேக பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால், என் கதி என்னாவது? நான் போகிறேன்".இதை சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது.சேவல் "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறி சிரித்தது. கெட்டிக்காரன் புளுகினா லும் அது புத்திச்சாலியிடம் வெளிபட்டு விடும்.

# தெரிந்த பழமொழி தெரியாத விளக்கம்



**களவும் கற்று மற**

பொருள்:

தீய பழக்கமான களவு (திருட்டை) நாம் கற்றுக் கொண்டு, மறந்து விட வேண்டும்

உண்மையான பொருள்:

**களவும், கத்தும் மற.**

**களவு - திருடுதல்,**

**கத்து - பொய் சொல்லுதல்.**

தீய பழக்கமான திருடுதல், பொய் சொல்லுதல் இவற்றை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

# அட அப்படியா?




உலகின் மிகப்பெரிய தீவு கிரீன்லாந்து. இது 8,27,000சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது. இலங்கைத் தீவின் விஸ்திரணம் வெறும் 14,000 சதுர மைல்கள் மாத்திரமே! ஸ்கொட்லாந்து , இங்கிலாந்து, அயர்லாந்து, வேல்ஸ் என்று 4 நாடுகளை உள்ளடக்கிய பிரிட்டனும் ஒரு தீவுதான். இது 88,745 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. ஆபிரிக்கா கண்டத்தை ஒட்டி ஒரு பெரிய தீவு இருக்கின்றது. மடகஸ்கார் என அழைக்கப்படும் இத் தீவு2,28,000 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. இது உலகின் ஐந்தாவது மிகப் பெரிய தீவாகும்.

# ஒரு குறள்
## பலர் விளக்கங்கள்



**குறள் 41:**
**இல்வாழ்வான் என்பான்**
**இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

**மு. வரதராசன் உரை:**

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.

**கலைஞர் உரை:**

பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும்.


**சாலமன் பாப்பையா உரை:**

மனைவியோடு வாழ்பவன்தான் பிள்ளைகள், பெற்றோர், உறவினர் என்னும் மூவர்க்கும் நல்ல வழியில் உதவுபவன்.

# அறிந்தால் சொல்லுங்களேன்

1. கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி எது ?
2. உலகிலேயே பெண் எம்.பிக்கள் அதிகம் உள்ள நாடு எது?
3. இந்தியாவின் தேசியப் பறவை எது?
4. நின்றபடியே தூங்கும் பிராணி எது?
5. வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிரி எது?











**விடைகள்**
1) வௌவால்
2) சுவீடன்
3) மயில்
4) குதிரை
5) ஈசல்

# புரியாத புதிர்

1. படபடக்கும் பளபளக்கும். மனதுக்குள் இடம்பிடிக்கும் அது என்ன?
2. நிலத்தில் முளைக்காத செடி. நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?
3. எவ்வளவு ஓடினாலும் எனக்கு வியர்வை வராது. வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது. அது என்ன?
4. கையை வெட்டுவார். கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். அவர் யார்?



**விடைகள்**
1) பட்டாசு
2) முடி
3) நாய்
4) தையல்காரர்





# பித்தன் யார்?



சிவனுக்கு, 'பித்தன்' என்றொரு பெயருமுண்டு. இவருக்கு பிடித்துள்ள பித்து என்ன? உயிர்களை தம் பக்தர்களாக ஆக்குவதில் பெரும் பித்தனாக இருக்கிறார். இந்த பித்தானது கருணை வடிவாகி, அருள் பெருகி, பல பக்தர்களை அவன்பால் பித்து பிடிக்கும்படி செய்கிறது.


அதீதமான பற்றுதலை பித்து என்பர். பணம், பணம் என்று அலைபவர்களை, 'பணப் பித்து' என்கின்றனர். சிவனையே நினைத்து பக்தி செய்பவர்களையும் பித்தன் என்பர். பகவானைப் புகழ்ந்து பாடி வழிபட்டால், அவனை சந்தோசப்படுத்தினால், அவன் பல சம்பத்துக்களையும் அளித்து, சம்சார பந்தத்திலிருந்து நம்மை விடுவிக்கிறான். பக்தர்களை ரட்சிக்க வேண்டியதை தன் பொறுப்பாகவே ஏற்றுக் கொள்கிறான். கஷ்டம், மரணம் என்பதெல்லாம் சாதாரண மக்களுக்குத் தான். அதை கண்டு அவர்கள் பயப்படுவர். ஆனால், அவைகளைக் கண்டு பக்தர்கள் பயப்படுவதில்லை. பக்தர்களுக்கு வளமையோ, செழுமையோ எதுவும் தெரியாது தெய்வத்தின் அருளே அவர்களது செல்வம்.

சிவனார் ஆலகால விஷம் உண்டார். எதற்காக? அந்த விஷம் வெளியில் இருந்தால் உலகத்துக்கு ஆபத்து என்பதற்காக. இது அவரது கருணையல்லவா! தெய்வத்தை வழிபட்டு, நெறியான வாழ்க்கை வாழ்ந்து, கடவுள் வழிபாட்டில் தீவிரமாக இருப்பவர்களை எந்தவித துன்பமும் பாதிப்பதில்லை.

பாண்டிய மன்னன், மாணிக்கவாசகரை பலவிதமாக துன்புறுத்தினான். ஆனால், அவர் கலங்கவில்லை. பகவானை நம்பினார். பிரகலாதனும் பலவித துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டும் வருத்தப்படவே இல்லை. தெய்வீக இன்பத்தில் திளைத்திருப்பவர்களுக்கு சரீர துன்பம் எதுவுமே தெரியாது!

தபஸ்விகள் தவம் செய்யும்போது, ஈ, எறும்பு கடித்தாலும், அதை அவர்கள் அறியமாட்டார்கள். மனம் கடவுளிடம் இருக்கும்போது சரீர இன்ப, துன்பங்கள் அவர்களது தியானத்தை கலைப்பதில்லை.

# பசியும் தாகமும் இல்லை





மனிதரின் அடிப்படைத் தேவைகளில் உணவும் நீரும் முதன்மையானவை. சாதாரண உணவு உயிரோடு இருப்பதற்கு உதவுகிறது. ஆனால், கடவுள் தரும் உணவு உயிர் வாழ்வதற்கு உதவுகிறது. இங்கு வாழ்வு எனக் குறிப்பிடப்படுவது ஆன்மிகம் சார்ந்தது. உயிரோடு வாழ்வது என்பது கடவுளோடு இணைந்த வாழ்வு. அந்த வாழ்வு அவருடைய மகன் இயேசுவால் எளிதாக்கப்பட்டிருக்கிறது.

இயேசுவை அன்றாட வயிற்றுப்பாட்டுக்கான உணவை வழங்கும் வல்லமை பெற்றவர் என்று, அவர் செய்த சில அற்புதங்களைக் கண்டு அவரை ஓர் உணவுத் தொழிற்சாலையாகக் கருதிக்கொண்டார்கள். அவரிடம் திரும்பத் திரும்ப அதையே எதிர்பார்த்தனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசுவின் பதில் அவர்களைத் தெளிவடையச் செய்தது.

யோவான் எழுதிய நற்செய்தி அதிகாரம் 6இல் 30 முதல் 35 இறைவசனங்களை வாசித்துப் பாருங்கள். இயேசு, கொல்லப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு மக்கள் மத்தியில் போதனை செய்துகொண்டிருந்தார். அப்போது மக்களில் சிலர் அவரிடம் வந்து, "ஐயா! நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் அருள் அடையாளம் காட்டுகிறீர். எகிப்திலிருந்து மீட்டுவரப்பட்ட எங்கள் முன்னோர்கள் பாலை நிலத்தில் தங்கியிருந்தபோது 'மன்னா' என்ற உணவை உண்டார்களே! 'அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளப்பட்டது' என மறைநூலிலும் எழுதப்பட்டுள்ளது அல்லவா!" என்று கேட்டனர்.

அதற்கு இயேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவை அருள்பவர் என் தந்தையே. கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது" என்றார். உடனே அவர்கள், "ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்று கேட்டுக் கொண்டார்கள். இயேசு அவர்களிடம், "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது"என்றார்.



# மன்னித்தால் மண்ணும் பொன்னாகும்

புளைலிப்னு இயால் என்பவர் கொள்ளைக்காரராக இருந்தார். ஒரு சமயம் ஒரு பெரியவர் குர்ஆன் வாசிப்பதை அவர் கேட்டார். அதிலுள்ள ஒரு வசனம் இயாலின் மனதில் புயலை ஏற்படுத்தியது. அந்தக் கணத்திலேயே அவர் கொள்ளைத் தொழிலை கைவிட்டார்.


'யாருடைய பொருளை நாம் அநியாயமாக எடுத்தோமோ, அதை அவரிடமே கொடுத்து, மன்னிப்பும் கேட்டால் பாவம் மன்னிக்கப்படும்" என்ற ரீதியில் அந்த வசனம் இருந்தது. இயாலும், அதனடிப்படையில், யாரிடம் எல்லாம் கொள்ளை அடித்தாரோ அவர்களைத் தேடிப்பிடித்து, பொருட்களை ஒப்படைத்து மன்னிப்பும் கேட்டார்.

இந்நிலையில் பொருள் தீர்ந்தது. பொருள் கொடுக்க முடியாதவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்டார். அவர்களில், ஒருவரைத் தவிர அனைவரும் அவரை மன்னித்தனர். தன்னை மன்னிக்காத அவரிடம், இயால் எவ்வளவோ கெஞ்சினார்.

'என்னிடம் கொள்ளையடித்ததில் சிறிதளவாவது திருப்பிக் கொடுத்தால் தான் மன்னிப்பேன்" என்று அந்த மனிதர் கண்டிப்புடன் தெரிவித்தார்.

'என்னிடம் பணம் ஒன்றுமில்லையே" என இயால் கெஞ்ச, 'அப்படியானால் கைப்பிடி மண்ணை எடுத்தாவது என் பையில் போடும்" என அந்த நபர் சொல்ல, இயாலும் அப்படியே செய்தார்.

அந்த நபர் சட்டைப் பையில் கையை விட்டார். அதற்குள் இருந்த மண் பொன்னாக மாறியிருந்தது. இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட அந்த நபர், 'உமது பாவ மன்னிப்பு அல்லாஹ்வால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் வேதத்தில் 'யாருடைய பாவ மன்னிப்பு கபூல் ஆயிற்றோ (ஏற்கப்பட்டதோ) அவர் மண்ணைஅள்ளிக் கொடுத்தாலும் அவை பொன்னாகி விடும்' என்று சொல்லப்பட்டிருப்பதை பார்த்திருக்கிறேன்" - என்றார்.



# சத்தியசோ

காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவினரால் ஆயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்ட நாடகம் அரிச்சந்திர மயான காண்டம். நடிக மணி வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனாக நடித்தார். 'சோகசோபிதசொர்ணக்குயில்' இரத்தினம், செல்வரத்தினம், தைரியநாதன் முதலானோர் பல்வேறு காலகட்டங்களில் சந்திரமதியாக நடித்தனர். இந்த இசை நாடகத்தைப் பின்னர் பிரபல எழுச்சிப் பாடகர் எஸ்.ஜி.சாந்தன் மேடையேற்றினார். 'மயானத்தில் மன்னன்' என்ற பேரிலும் அரியாலையைச் சேர்ந்த பொன்னையா சண்முகலிங்கம் என்பவரால் நடிக்கப்பட்டது. இந்த அரிச்சந்திரன் கதா பாத்திரம் மகாத்மா காந்தியின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசுரிமை, மனைவி, மகனை இழந்த போதும் சத்தியத்துக்காக நிலைகுலையாத மன்னன் அரிச்சந்திரனின் வரலாறு அது. மகாத்மாகாந்தி தனது சுய சரிதையை சத்தியசோதனை என்ற பெயரிலேயே எழுதினார்.

தமிழர் தம் வரலாற்றிலும் இதேபோன்ற நிலை எழுந்தது. உணர்வுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் 'அவர்' உயிருடன் வாழவேண்டும் எங்காவது தப்பித்து இருக்கவேண்டும் என மனதார விரும்புகின்றனர். ஆனால் அவர் இல்லை என்பதே யதார்த்தம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சாத்திரிமாரை அணுகும்போது அவர் ஒரிடத்தில் உள்ளார் மறை பொருளாகக் காட்டுகிறது என்றே சொல்லுவர். உண்மையில் அவர்களுக்குத் தெரியும் ஆள் இல்லையென்று. அதைச் சொன்னால் அன்று கிடைக்கும் வருமானத்துக்குப் பின் எதுவும் கிடைக்காது. ஆகவே இருக்கிறார் - இருக்கிறார் என்று தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்.

இதையொத்த நிலைதான் 2009 மே 18 இற்குப் பின் ஏற்பட்டது. சுமார் முப்பத்தையாயிரம் மாவீரர்களை வழிநடத்தியவர் மாவீரராகிவிட்டார். அவரை மாவீரர் பட்டியலில் சேர்க்கத் தயாரில்லை புலம்பெயர் வாசிகளை வழிநடத்துவோர். அவரின் அண்ணன் மனோகரன் "சிலர் மண்ணில் தேடுகிறார்கள் சிலர் விண்ணில் தேடுகிறார்கள்" என ஒரு ஊடகத்தினரின் கேள்விக்குப் பதிலளித்தார். வேறு எப்படித்தான் பதிலளிப்பது? அவர் தமிழரின் மனங்களில் வாழ்கிறார் என்பதே உண்மை. குலம் அண்ணா அவருக்கு விளக்கேற்றி தமது உணர்வை வெளிப்படுத்த முயன்றார்.

அதற்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் உயிரோடு உள்ளார் என்று மற்றவர்களுக்குச் சொல்லலாம். குலம் அண்ணருக்கே சொல்ல முடியுமா? தலைவருக்கு விளக்கேற்ற அனுமதிக்காத இடத்தில் எனக்கென்ன வேலை ? என நினைத்தார். ஒரு மாபெரும் பொய்யை வழிமொழிய அவர் தயாராக இருக்கவில்லை. இதற்காக அல்பிரட் துரையப்பா, கருணா போன்றோருக்கு கொடுத்த பட்டத்தை வாய்மொழியாகவும், சமூகவலைத் தளங்களிலும் பரப்பினர். எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு 2009 க்கு பின்னர் மாவீரர் நாளில் ஒரு சாதாரண தமிழ் மகனாக ஒரு மூலையில் நின்று சுடரேற்றி விட்டுத் திரும்புகிறார்.

'ஒரு விளக்கேற்ற வேண்டுமென்று துடிக்கிறார்கள்" என்றும் ஒரு பிரகிருதி இவரது நிலைப்பாட்டைக் கொச்சைப்படுத்தினார்.

2009 இல் 'எமது ஆயுதப்போராட்டம் மௌனித்து விட்டது" என்றுஅரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உத்தியோகபூர்வமாக அறிவித்தாயிற்று. 2011 ஜனவரி 11 இல் சுவிஸ் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாட்டாளர்கள் 7 பேரை சுவிஸ் அரசு கைது செய்தது. இவர்கள் உட்பட 13 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. சுவிஸிலுள்ள தமிழர்களிடம் பலாத்காரமாக நிதி சேகரிக்கப்பட்டது என்றொரு குற்றச்சாட்டு. இப்பணம் குற்றவியல் அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டது என்றுமொரு குற்றச்சாட்டு. வங்கியை ஏமாற்றினர் என்றும் ஒரு குற்றச் சாட்டு. இறுதி யுத்தத்தின் தேவைகளுக்கென தனி மனிதர்களின் பெயர்களில் கடன் பெற்று இயக்கத்துக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. .

இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக அங்குள்ள அப்போதைய மற்றும் தற்போதைய தலைமை மௌனம் காத்தது. அவர்கள் வேண்டிய காசு; அவர்களே கட்டட்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. இந்தக் காசு எங்கே போனது என்பதும் சந்தேகமறத் தெரியும். அந்தப் பொய்யை தொடர்ந்து சொல்ல விடாமல் குலம் அண்ணா போன்றோர் தடுக்கிறார்கள் என்பதே அவர்களின் கோபம். சுவிஸில் உள்ள தமிழர்களிடம் நாம் மனம் விரும்பியே நிதி வழங்கினோம் என்றொரு ஆவணத்தைச் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் வழங்கினால் வழக்கை முடிக்கலாம் என்றொரு நிலை இருந்தது. மாவீரர் நாள் நிகழ்வு மற்றும் ஆலயங்கள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் மக்களிடம் கையெழுத்து வாங்க முயன்றனர். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த 14 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும் குலம் அண்ணர் இந்த விடயத்தை உலகுக்கு வெளிப்படுத்தினார். உலகெங்கும் உள்ள ஆர்வலர்கள் உணர்வாளர்கள் சம்பந்தப்பட்டோரின் செயல் குறித்து கடும் சீற்றமடைந்தனர். எனினும் பூப்புனித நீராட்டு விழா, திருமணம் போன்ற வைபவங்களில் இந்த விடயத்தை தெரியப்படுத்திய எஸ்.ரி.ஏ. எனும் அமைப்பினர் மக்களிடம் படிவத்தை வழங்கிக் கையொப்பம் பெற்றனர். இச் செய்தியை குலம் அண்ணரின் வாயால் கேட்டதும் மிகவும் ஆறுதல். இவ்வாறு கையெழுத்திட்ட 5069 உணர்வுத் தமிழர்களே! உங்கள் அனைவரையும் ஒவ்வொரு போராளியாக நான் மதிக்கிறேன், என் நண்பர்களாக ஏற்கிறேன். எனது நட்பை ஏற்றுக்கொள்ளுங்கள். மன்னிக்கவும்! எனது தலைவன் யார் காலிலும் விழக்கூடாது என்றுதான் எங்களுக்குக் கற்பித்திருக்கிறார்

● ● ●

இன்றோ போராடிய இனம் யார் யாரோ காலிலெல்லாம் விழுகிறது. அவர் இருக்கிறார்; திரும்பி வருவார் என்று சொல்வதன் மூலம் தமக்கான கடமையை நாசூக்காக நிராகரிக்கின்றனர். யுத்தம் முடிந்தபின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய கடமை மக்கள் பிரதிநிதிகளுக்கும், வெளிநாட்டில் முதலீடுகளை வைத்திருப்போருக்கும், ஏனைய புலம்பெயர்ந்த உறவுகளுக்கும் உள்ளது. மூன்றாம் தரப்பினர் ஏதோ தம்மாலான உதவிகளைச் செய்கின்றனர். மலைபோல் உள்ள தேவைக்கு இது மிகவும் அற்பமே. இருக்கும் பணத்தை நாட்டில் தேவை உள்ளோருக்கு அனுப்பாமலிருக்க தீர்மானித்த இரண்டாம் தரப்பினர் இந்த முதலீடுகளை எப்படி மேலும் பெருக்கலாம் என எண்ணுகின்றனர்.

அரசியல்வாதிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்களுக்கு எப்போதுமே அடுத்த தேர்தல் பற்றிய சிந்தனைதான். ஆளுமையுள்ளவர்க எவரும் அருகில் வந்துவிடக்கூடாது. அவர்களுக்கு தேவை எடுபிடிகளே. இந்த நிலையில் தமக்கு சமூக அங்கீகாரமும் வாழ்வாதாரமும் வழங்கும் சக்திகளின் பின்னால் பாதிக்கப்பட்டோர் இழுபட்டுப் போவது தவிர்க்கமுடியாதது.

ஒரு மனிதனை "நூறாண்டு காலம் வாழ்க!" என்றே வாழ்த்துகிறோம். இப்போதிருந்தால் அவருக்கு 64 வயது. இன்னும் 36 வருடங்களுக்கு இப்படியே சொல்லிக்கொண்டிருக்கப் போகிறார்களா? இன்று இவர்கள் சொல்லும் சொல்லை பலர் நம்புகின்றனர். இவர்களின் பிள்ளைகள் 36 வருடங்களுக்குப் பின்னும் இதே பொய்யைச் சொல்லப்போகிறார்களா? அப்போது எமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இந்தக் கதையைக் கேட்க வேண்டி வருமா? ஒவ்வொருவரு யாருக்காகச் சுடரேற்றப் போகிறீர்களோ அத்தோடு மனதில் அவரையும் நினைத்துச் சுடரேற்றுங்கள்

● ● ●

இன்று முன்னாள் போராளிகள், போராட்டத்துடன் நீண்ட காலம் ஒத்துழைத்தோர் யாசகம் கேட்கின்றனர். மனதை உலுக்கும் செய்தி இது. இன்னொரு விடயம் ஒரு ஆண் எந்த வயதிலும் தந்தையாகலாம். ஆனால் பெண்ணின் நிலை அப்படி அல்ல. பெரும்பாலும் 35 வயதுக்குப்பின் தாயாக முடியாது. (விதிவிலக்காக சிலர் 40வயதிலும் குழந்தை பெறுகின்றனர்) அவர் வளர்த்த செஞ்சோலைப் பிள்ளைகள் பலருக்குத் திருமணமாகவில்லை. ஒரு பகுதியினர் வவுனியா டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் உள்ளனர். இன்னொரு பகுதியினர் அகிலாண்டேஸ்வரி இல்லத்தில் உள்ளனர். இவர்கள் பற்றிச் சீரியஸாகச் சிந்திக்க வேண்டும். வயது வந்த ஆண் பிள்ளைகள் உள்ள தமிழர்கள் இந்தப் பிள்ளைகளை மருமக்களா ஏற்கத் துணியவேண்டும். அது அவருக்கு செய்யும் நன்றிக் கடனாகும். நாங்கள் உறவுகள் இருக்கிறோம் என நம்பிக்கையூட்ட வேண்டும். இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் தங்களாலான பங்களிப்பை வழங்கவேண்டும். டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தை நிர்வகிக்கும் அருட்சகோதரி குடிகாரனாக இல்லாமல் இருந்தால் அதுவே போதும் என்கிறார்.

வெளிநாட்டில் சண்டித்தனம் புரிவோருக்கு இவ்வாறான விடயங்களில் அக்கறை இல்லை. முள்ளிவாய்க்காலில் எல்லாத்தரப்பையும் ஒற்றுமையாக்கி விட்டாலும் இவர்கள் விடுவதாய் இல்லை. தனியே சுடரேற்ற ஏற்பாடுசெய்தார்கள். பிரதேச வேறுபாடு காட்டுகிறார்கள் என்ற மாயையை ஏற்படுத்தத் துணை நின்றார்கள். பிரான்ஸில் மாவை கலந்துகொண்ட மாநாட்டில் கண்ணீர்ப்புகையடிக்க ஏற்பாடு செய்தார்கள். எமது மொழியின் பெயரால் யாழ்ப்பாணத்தில் மாநாடு நடந்தாலும், பிரான்ஸில் நடந்தாலும் கண்ணீர் புகைக்குண்டுதானா? அன்று யாழ்ப்பாணத்தில் நடந்த கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதலைத் தொடர்ந்து ஒன்பது பேர் உயிரிழக்க நேர்ந்தது. அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுத வழியை இளைஞர் நாடினர். ஏற்கனவே தமிழ் இளைஞர் பேரவையில் அங்கம் வகித்த குலம் அண்ணரும் அதில் ஒருவர்.


(18ஆம் பக்கம் பார்க்க)

# சாதனை

■ பசீர் காக்கா / காக்கா அண்ணை

னர்.
தவை
த்த
எப்படி
ர்.
டுத்த
ள்ளவர்கள்
களுக்கு
கு சமூக
க்திகளின்
போவது
!"
ல்
ளுக்கு
ம்
இதே
போது
இந்தக்
வாருவரும்
அத்தோடு
ங்கள்
ழத்தோர்
ன் எந்த
ணின்
லக்காக
) அவர்
க்குத்
னியா
ளனர்.
ரி
யஸாகச்
ளைகள்
மக்களாக
கள்
டும்.
லான
ாஸ்கோ
காதரி
வ
க்கு
லை.
வெதாய்
ார்கள்.
ட்டில்
ள். எமது
ாநாடு
ணீர்
ந்தில்
லத்
ந்தது.
ழியை
ளஞர்
ளரும்


> உணர்வுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் 'அவர்' உயிருடன் வாழவேண்டும் எங்காவது தப்பித்து இருக்கவேண்டும் என மனதார விரும்புகின்றனர்.



புலிகள் விடுதலை இயக்கமே என உறுதிப்படுத்திய சுவிஸ் நீதிமன்று




தனியாக விளக்கேற்ற கிழக்கிலிருந்து அனுப்பப்பட்ட பேருந்துந்தில் காணப்பட்ட பதாகை



பிரான்ஸில் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாட்டில் கண்ணீர் புகைக்கண்டு வீச்சு

## யார் இந்தக் குலம் அண்ணர்?



**இயற்பெயர் : செல்லையா குலசேகரராஜசிங்கம்**
**சொந்த இடம் : புன்னாலைக்கட்டுவன்**
**பிறந்த திகதி : 1955 ஏப்ரல் 17**

"சுருக்கமாகச் சொன்னால் ஈழத்துக் காமராஜர். இருவருக்குமிடையில் வழிமுறைகள் மாறுபட்டபோதும் அவரைப்போலவே திருமணமாகாதவர். எளிமைக்கும் யோக்கியத்துக்கும் இவரேயே உதாரணம் காட்டுவர். "புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கத்தில் இருந்த சுமார் பத்துப் பேரில் ஒருவர். தமிழ் உணர்வாளர்களைத் தேடித் திரிந்த தலைவர் பிரபாகரன் 1975 இல் இவரை இனங்கண்டார். துரையப்பாவின் சம்பவத்துக்குப் பின்னர் தலைவரைப் பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர். ஒரு தேவைக்காக தலைவருடன் அச்சுவேலிக்குப் போய் வருகையில், வேறொரு விடயமாக வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் இவர்களை மறித்தனர். அவ்வேளை தலைவர் வானத்தை நோக்கித் துப்பாக்கி பிரயோகம் செய்யவே பொலிஸார் சிதறி ஓடினர். அவரின் துணிச்சலை நேரடியாகக் கண்ட குலம் சரியான தலைவனின் தொடர்பு கிடைத்ததற்காகப் பெருமைப்பட்டார்.

தீவிரவாத இளைஞர்களைத் தேடித் திரிந்த இன்ஸ்பெக்டர் சம்பந்தனுக்கு துரோகி ஒருவர் இவரை இனங்காட்டினார். பொலிஸாரால் கைதான இவர் மோசமான சித்திரவதைக்குள்ளானார். பல்வேறு இடங்களுக்குக் கொண்டு திரிந்த பொலிஸார் பின்னர் கொழும்பு நாலாம் மாடியில் தடுத்து வைத்திருந்தனர். இரத்மலானையில் இடம்பெற்ற அவ்ரோ விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி வழக்குத் தாக்கல் செய்தனர். அதன் பின் "அவ்ரோ குலம்" என்றே எல்லோராலும் குறிப்பிடப்பட்டார்.

அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் வாதாடி இவரை விடுவித்தார். 1980 மே மாதம் இயக்கத்தில் பிளவு உண்டானது. இரு பகுதியினரையும் ஒன்றிணைக்க ராஜா என்பவர் லண்டனிலிருந்து வந்திருந்தார். 1980 ஓகஸ்ட் மாதம் ஊர்காவற்றுறை கரந்தனில் இணைப்புச் சம்பந்தமாகக் கலந்துரையாடல் நடைபெற்றது. இரு பகுதியினரதும் கருத்துக்களை குலம் அண்ணரே பதிவு செய்தார். சமரச முயற்சி வெற்றிபெறவில்லை. செல்லக்கிளி அம்மான், காந்தன் முதலியோரைப்போல இவரும் தற்காலிகமாக ஒதுங்கி இருக்க முடிவு செய்தார். எனினும் 1981 இல் குட்டிமணி , தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டதும் இவரையும் பொலிஸார் கைது செய்தனர். விமானம் மூலம் பலாலியிலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டோரில் இவரும் ஒருவராக இருந்தார். பனாகொடை முகாமில் குட்டிமணி , தங்கத்துரைக்கு நிகழ்ந்தது போன்றே கடுமையான சித்திரவதை இவருக்கும்.

1982 இல் சந்திரஹாசன் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு மூலம் விடுதலையானார். எனினும் பிரதி வாரம் பொலிஸில் கையெழுத்திட வேண்டியிருந்தது. பின்னர் சவூதி அரேபியாவுக்கு வேலைக்குச் சென்றார். மண் வீடு, வறுமை, திருமணமாகாத மூன்று சகோதரிகள் - வேறு வழியில்லை. 1984 இல் இந்தியாவுக்குச் சென்றார். தலைவரைச் சந்தித்த பின் 1985 இல் சுவிற்சர்லாந்துக்குச் சென்றார். இவரது புகலிடக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டது. சுவிஸில் செங்காளன் மாநிலத்தில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கினார்.

2000ஆம் ஆண்டிலிருந்து சுவிஸ் முழுவதற்குமான பொறுப்பை ஏற்றார். 2009 இல் யுத்தம் முடிவடையும் வரை இப்பொறுப்பில் இருந்தார்.

கே.பியின் அறிவித்தலுக்கு அமையவும் ஜீ. ரீ.வி.(GTV) (தமிழ் தொலைக்காட்சி) தகவல் அடிப்படையிலும் அலுவலகத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தலைவர் இருக்கிறார் என ஒரு பகுதியினரும் அவர் வீரச்சாவு அடைந்துவிட்டார் என்று இன்னொரு பகுதியினரும் முரண்பட்டுக் கொண்டார்கள், இந்நிலையில் முரண்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்காக அலுவலகத்தை விட்டு வெளியேறினார்.

இறுதி யுத்தத்தில் தலைவரின் இழப்பு இவருக்கு வேதனையைக் கொடுத்தது. மக்களினதும் தமதும் மனங்களில் தலைவர் வாழ்கிறார் என்றார் இவர். அவர்களோ மண்ணிலும் வாழ்கிறார் என்று சொன்னார்கள். இவரால் ஏற்கமுடியவில்லை.

பல்வேறு பட்டங்கள் கிடைத்தன. 1975 இல் விடுதலை இயக்கத்தில் இணைந்த தனக்கு, சுமார் இரண்டு தசாப்தங்களின் பின்னர் இணைந்தவர்கள் வழங்கும் பட்டங்கள் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. "என் கடமை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணி செய்து கிடப்பதே..." என்பது அவரது நிலைப்பாடு. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறிப்பாக கிழக்கு மாகாண மக்களுக்கு உதவி வருகிறார்.

தன்னுடையதும் தனது சகாக்களின் விடுதலை என்பதைவிட "விடுதலைப் புலிகள் என்பது குற்றவியல் அமைப்பு அல்ல" என நீதிமன்றம் தெரிவித்ததே மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்கிறார். தனக்காகவும் 1994ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்புக்காகவும் வாதாடிவரும் தமது சட்டத்தரணி மார்சல் பெஸோநெற் (Marcel Bosonet) அவர்களுக்கு நன்றி கூறுகிறார்.

■ செங்கை ஆழியான்

# ஏதோ ஒன்று

இருள் வானைக் கீறிக் கொண்டு பாய்ந்த எரி வெள்ளி ஒன்று, ஒளி ஒடுங்கி, அவிகின்றது. எவ்வளவு உண்மை, மறுக்கவே முடியாத பிரத்தியட்சமான உண்மை. அடிவானில் ஒளி ஒடுங்கி, அவியத்தான் வேண்டுமா?

தூரத்தே பெரும் கட்டடங் களின் மங்கற் கோடுகள். இருளூடே தெரிகின்றன. அவற்றுக்கும் அப்பால், சிவனொளி பாத மலையின் சிகரத்து மின் விளக்கு, நம்பிக்கை தரும் ஒளியாக மின்னுகின்றது. நம்பிக்கை தரும் அச்சிறு ஒளியின் பின்னால், அதனோடு இணைந்து, மாபெரும் மலை, உண்மைப் பொருள் இருக்கிறது.

எரி வெள்ளி...?

முழுவதும் ஒளிதான், ஆனால் அதன் பின், - கண்ணைப் பறித்து மின்னி அவியும்போது அதன் பின் - சூனியம் தான் மிச்சம். என் கொள்கைகள் எரிவெள்ளியா?

'சகல பிரச்சினைகளுக்கும் காரணம், அடிப்படைக் காரணம், என்ன தெரியுமா? அவன் என்னை நிமிர்ந்து பார்க்கிறான். அவன் பார்வையில், என் பேச்சில் இருந்த படபடப்பு இல்லை. அமைதி உருகி வருகிறது.

'நீயே... சொல்லு....!"


'அடிப்படைக் காரணம் பொருளாதாரக் குறைவுதான்....! ஒருவன் அளவிற்கு அதிகமாக உண்டுகளிக்கும்போது, இன்னொருவன் ஒருவேளை கஞ்சிக்கும் வழியில்லாமல் தவிக்கிறான்! ஒருவன் ஆடம்பரமாகக் காரிலே பவனி வரும்போது, இன்னொருவன் கொதிக்கும் வெயிலில், தார் சூடு பாதங்களைத் தீய்க்க, செருப்பிற்கே வழியின்றித் தடுமாறுகிறான்! ஒருவனுக்கு அளவுக்குமதிகமான உடைகள்! இன்னொருவனுக்கு தன் மானத்தை மறைக்கவும் ஒரு முழந்துண்டில்லை! ஒருவனுக்கு அரண்மனை போன்ற வீடுகள் பல! இன்னொருவனுக்கு வாழ்வதற்குச் சிறு குடிசையுமில்லை! ஒருவன் பிறர் உழைப்பிலே வாழ்கிறான்! இன்னொருவன் உழைத்து வாழ வழியின்றித் தவிக்கிறான். இந்த நிலையேன்.....? இந்த ஏற்றத்தாழ்வுகளேன்? மனிதர்களுக்குள் ஏற்ற இறக்கங்கள் ஏன்?'

உணர்ச்சி வசப்படுகின்றேன். எதிர்த்தரப்பில் அமைதி 'இந்த மனித பேதத்தை முற்றாக ஒழிக்க வேண்டும்! வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அமைக்கவேண்டும்! எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் எல்லாத்துறைகளிலும் அளிக்க வேண்டும்!

ஆவேசத்தோடு தொடர்கின்றேன்.

'அப்போதுதான் எல்லோருக் கும் உணவு கிடைக்கும்! வாழ வீடுகள் கிடைக்கும்!'

இருளினூடே என் கண்கள் துழாவுகின்றன. மலையுச்சியில் அமைந்திருக்கும் என் விடுதியிலிருந்து பார்க்கும் போது, பல்கலைக்கழகக் கட்டடங்கள்



மங்கலாகத் தெரிகின்றன. மேடுகளும், பள்ளங்களும்!

வானில் இங்கொன்றும், அங்கொன்றுமாக நட்சத்திரப் பூக்கள். இரவுச் சாப்பாட்டிற்குரிய அழைப்பு மணி கிணு கிணுக்கின்றது. அவன் எழவில்லை.

'வர்க்கபேதமற்ற ஒரு சமூகத்தை நான் எதிர்க்கிறேன் என்று நீ எண்ணுகிறாயா?'

நான் அவனைக் கண்ணிமைக்காது பார்க்கிறேன்.

அவன் மெதுவாக எழுந்து சென்று, பலகணிக் கதவைத்திறந்து விடுகின்றான். மென்காற்று இழைக்கிறது!

மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடாது என்றுதான் நானும் விரும்புகின்றேன். எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன்! ஒருவன் ஒருவேளை சோற்றிற்குத் தவிக்கும்போது, இன்னொருவன் மேலதிகமாக உண்டு சீரழிப்பதை நானும் வெறுக்கிறேன்!

'அப்படியானால் நீயேன் மொழி, இனம் மதம் என்று திரிகிறாய்?

வானில் இருளின் கருமை அகன்று, தெளிவு தோன்று கின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்த நட்சத்திர மலர்கள், வானமெங்கும் இப்போது மலர்கின்றன.

'அவ்விடத்தில் தான் நீயும், நானும் வேறுபடுகின்றோம்! நீ உணவு மட்டும் தான் வாழ்க்கை என்கிறாய்?'

'பின் வேறு என்ன?....?'

'உணவுமட்டும்தான் வாழ்வல்ல! உணவு மட்டும்தான் வாழ்வென்றால், மிருகங்களுக்கும், எங்களுக்கும் என்ன வித்தியாசம்?'

அவன் கேள்வியோடு நிறுத்தி விட்டு, என்னைப் பார்க்கின்றான்:

'உன் கொள்கைகள் உயர்ந்தவை! நல்லவை! ஆனால் - சிறிது யோசித்துப்பார், தெரிந்தோ, தெரியாமலோ மொழியையும், இனத்தையும், மதத்தையும் காட்டி.., ஒரே நாட்டில் வாழ்கின்ற இன்னொரு சமூகத்தின் மேல் இனவெறியை ஊட்டிவிட்டு, பதவிக்கு வந்த சிங்கள அரசில், நாம் வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தைக் காணப் பொதுவுடைமை பேசுவது சரியா? அப்படிப் பேசிக்கொண்டிருந்தால் நம்மினம், நம்மொழி..."

நான் வேகமாகக் குறுக்கிடு கின்றேன். 'வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தில், இனம், மொழி?'

இப்பொழுது அவன் குறுக்கிடுகின்றான்: 'இரு மொழி பேசும் மக்கள் சமூகம் வாழ்கின்ற ஒரு நாட்டில், ஒரு சமூகம் மட்டும் அதுவும் சிறுபான்மைச் சமூகம் மட்டும், வர்க்கபேதமற்ற சமூகத்தை அடையப் போராடும்போது, அச்சமூகத்தின் மொழி இனம் அழிந்து போய்விடும்! அதுமட்டுமல்ல, எல்லா மக்களும், மொழி, இன மதவேறுபாடுடின்றிப் போராடும் போதுதான் நீ கருதுகின்ற சமூகம் உருவாக முடியும்...!'

என் கண்களில் வெறுப்பு "புரிந்து கொள்ளாதவன்!"

'உணவு மட்டுத்தான் வாழ்க்கையா?" அவன் திரும்பவும் கேட்கிறான்.

என் தலை திடமாக அசைகிறது.

'உணவு கிடைத்தால் போதுமா?" திரும்பவும் கேட்கின்றான்.

'ஒரு மணிக்கு மேலாகிறது! இன்னும் படுக்காமல் வெளியே என்னத்தை அப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கின்றாய்?" என் அறை நண்பன் கேட்கிறான்.

'நீ படுத்துக்கொள்! விளக்கை அணைத்து விட்டுப் படு!'

வெளியே இருள் தான். தூரத்தில் சிவனொளி பாதமலைச் சிகர மின் விளக்கு கண்ணைச் சிமிட்டுகிறது.

நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் ஒன்றாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

'எவ்வளவு ஐக்கியம்!'

இன்னொரு மேசையிலிருந்து அவன், அந்த பிற்போக்குவாதி, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். எனக்குப் பக்கத்தில் ஓரிடம் காலியாக இருக்கிறது. அதில் ஒரு தமிழ் மாணவனை அழைத்து வந்து இருத்துகிறான், எங்களுக்கு உணவு பரிமாறுகிறவன்.

இந்தத் தமிழ்ப் பன்றிகளை இங்கேன் இருத்துகிறாய்?' கேட்டவன், என் முன்னிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு சிங்கள மாணவன்தான், சிங்களத்தில் தான் கேட்டான்.

என் இதயமேன் துடிக்கிறது? இதயமே நீறற்று வறண்டு போனது போல்... அடிவயிற்றில் பெரு நெருப்புப் படர்வது போல... என்னால் அங்கிருக்க முடியவில்லை. மொழி விளங்காத நண்பர்கள் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் எழுந்து சென்று, 'அவனு'க்கு முன் அமர்ந்து கொள்கின்றேன். அவன் விழிகளில் அதிசயம், கேள்வி.

நான் வேதனையோடு விளக்குகின்றேன். அவன் சிரிக்கின்றான்.

'உணவு மட்டுந்தான் வாழ்க்கையா?'

நானென்ன பதில் கூறுவேன்?

'உணவு மட்டுந்தான் வாழ்க்கை என்றாயே? அப்படியானால் இங்கே ஏன் எழுந்து வந்தாய்? தமிழ்ப் பன்றி என்று சொன்னானே, அவனுக்கு முன்னாலும் உணவு இருக்கிறது தானே?'

வேதனையோடு தலை குனிகிறேன்.


'அவன் அப்படிக் கூறியபோது நீ எதையோ ஒன்றை இழந்தது போல உணரவில்லையா?' உணர்கிறேன், உணர்கிறேன்.

இருள் வானைக் கீறிட்டுக் கொண்டு பாய்ந்த எரி வெள்ளி ஒன்று, ஒளி ஒடுங்கி, அவிகின்றது. தூரத்தே சிவனொளிபாதமலைச் சிகரத்து மின் விளக்கு மின்னுகின்றது. ●

# அழிந்து விடுமா பனி இராஜ்ஜியம்?

உறைந்த பனிப்பாளங்கள் அடியோடு அழிக்கப்பட்டு விடுமா?

அண்டார்டிக்கா கண்டத்தின் பனிப்படலம் உருகும் வேகம் முன் இருந்ததை விட மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளனர். புவியின் தென் துருவத்திலுள்ள அண்டார்டிக்கா கண்டத்தில் உள்ள பனிப்பாறைகள் கடந்த சில ஆண்டுகளாக உருகி வருகின்றன. கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் 3 ட்ரில்லியன் தொன் பனி உருகியுள்ளதாகத் தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் இதனால் கடல் மட்டம் உயரவும், கடற்கரையோர பகுதிகள் கடும் பாதிப்படையவும் வாய்ப்பு உள்ளதாக எச்சரித்து வருகின்றனர்.



இந்நிலையில் 3 ட்ரில்லியன் தொன் பனியின், ஐந்தில் இருமடங்கானது கடந்த 5 ஆண்டுகளிலேயே உருகியுள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது. இது உலக வெப்ப மயமாதலைக் கட்டுப்படுத்த விடுக்கப்பட்டுள்ள மற்றும் ஒரு எச்சரிக்கை என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். கடந்த 2012 ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு 76 பில்லியன் தொன் பனி உருகி வந்த நிலையில், தற்போது ஆண்டுக்கு 219 பில்லியன் என பனி உருகும் அளவு மும்மடங்கு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொழிற்சாலைகள் வெளியிடும் வெப்பத்தின் அளவு இதே நிலையில் நீடிக்கும் பட்சத்தில் இந்த நூற்றாண்டு முடிவில் அங்குள்ள பனி மொத்தமும் உருகலாம் என அஞ்சப்படுகிறது.

காணக்கிடைக்காத ஒன்றாகி விடுமோ பனிப்பாளங்கள்?

# அதிகம் குடிப்பவர்கள் பணக்காரர்களா?




ஒரு புதிய ஆய்வு ஒரு புதிய தகவலைத் தந்திருக்கின்றது. அதிக பணம் சம்பாதிப்பவர்கள் அதிக குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற அதிர்ச்சியே அது.

குடிப்பழக்கம் உடல்நலத்திற்கு கேடு என்றும் ஆயுளை குறைக்கும் என்றும் தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. இதேவேளையில் அளவோடு குடிப்பது உடல்நலத்திற்கு நல்லது என்றும் சில ஆய்வுகள் கூறுகின்றன. இந்நிலையில் தினமும் குடிக்க விருப்பம் உள்ளவர்கள் குறித்த ஆய்வு நடத்தப்பட்டு அதன் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் தகவல் மிகவும் அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது. அதில் மற்ற நாடுகளை. விட அமெரிக்கர்களே அதிகம் குடிப்பவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் தினமும் குடிப்பவர்களின் பட்டியலில் உள்ளனர். அதிக பணம் சம்பாதிப்பவர்களே அதிகம் குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. இளைஞர்கள் மற்றும் குறைவாக சம்பாதிப்பவர்கள் வாரத்திற்கு ஒருமுறை, வார இறுதி என்றுதான் குடிக்கிறார்கள். ஆனால், அதிகம் சம்பாதிப்பவர்கள் தினமும் அதிகளவில் குடிக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணப்புழக்கம் குடிப்பழக்கத்தைக் கொண்டுவருவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

# கன்னிகளே கரவில் உறவு வேண்டாம்...!



உதைபந்தாட்ட திருவிழா தொடங்கிவிட்டது. இந்த விழாவுக்கு வரும் இளசுகளுக்கு இது பெரும் கொண்டாட்டம். குடியும், குமரிகளுமாக அலைபவர்கள் ஏராளம். இந்தச் சந்தர்ப்பத்தில், ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அபாய சங்கை ஊதியிருக்கிறார். உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை பார்க்க வரும் வெளிநாட்டு ரசிகர்களுடன் உடலுறவு வேண்டாம் என்றே அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.


ஒலிம்பிக் உட்பட சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களில் பாலியல் தொழில் கொடிகட்டிப் பறக்கும். அந்த வகையில் சமீபத்தில் ரஷ்யாவில் தொடங்கிய உதைபந்தாட்டப் போட்டியை கண்டு ரசிக்க அந்நாட்டிற்கு வந்துள்ள லட்சக்கணக்கான வெளிநாட்டு பார்வையாளர்களை திருப்திப்படுத்த ரஷ்யாவில் உள்ள பாலியல் தொழிலாளிகள் ஆர்வத்துடன் உள்ளனர்.

இந்நிலையில் ரஷ்ய நாடாளுமன்ற டமாரா பிலெட்னியோவா, உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை பார்க்க வரும் வெளிநாட்டவர்களுடன், ரஷ்ய பெண்கள் யாரும் உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடாது என கடுமையாக எச்சரித்துள்ளார்.

கடந்த 1980 ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் போது, அந்தப் போட்டியைக் காண வந்த வெளிநாட்டு பார்வையாளர்களுடன் ரஷ்ய பெண்கள் பலர் உடலுறவு வைத்தனர். இதனால் பல பெண்களுக்கு ஆபிரிக்கா, அமெரிக்கா உட்பட பல நாடுகளின் கலப்பில் ஏராளமான குழந்தைகள் பிறந்தன என்பதாலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்தாடப்பட்டு விடாதீர்கள் பருவப் பெண்களே!

# நின்று கொண்டு தண்ணீர் குடிக்கலாமா?



தண்ணீர் நிறையக் குடிக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அந்த நீரை எப்படிக் குடிக்க வேண்டும் என்பதிலும் பல விடயங்களை நாம் அறிய வேண்டும்.

நின்று கொண்டு தண்ணீர் குடிக்கும்போது நீரின் அழுத்தம் அதிகமாக இருக்கும். அதனால் அடிவயிறு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கும், செரிமானப் பகுதிகளுக்கும் வேகமாக செல்லும் நீர் ஜீரண பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். நீரின் வெப்பநிலையும் மிகவும் முக்கியம். அது சீராக இல்லாவிட்டால் வயிற்றுப் பகுதி பாதிப்புக்குள்ளாகும். அதனால்தான் குளிர்ந்த மற்றும் சூடான நீரைப் பருகக்கூடாது என்று கூறப்படுகிறது.

நின்று கொண்டு தண்ணீர் குடிக்கும்போது நீர் அதிக அழுத்தத்துடன் சிறுநீரகத்தை சென்றடைந்துவிடும். அதுவும் நாளடைவில் சில பாதிப்புகளை உருவாக்கலாம். நின்று கொண்டு தண்ணீர் பருகும்போது அதிக அழுத்தம் கொண்ட நீரோட்டம் ஒட்டுமொத்த உடல் இயக்கத்திற்கு குறிப்பிட்ட நேரம் வரை சீரற்றதன்மையை உருவாக்கும். இதனால் மூட்டுவலி மற்றும் எலும்புகளின் இணைப்புகளில் பாதிப்பு ஏற்படக் கூடும். தொடர்ச்சியாக நின்று கொண்டே பருகினால் இதயம் மற்றும் நுரையீரல் இயக்கங்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படலாம்.

தண்ணீரில் கண்டம் என்பது இதுதானோ...?

# உளக்காயங்கள் தொடர்கின்றன...! கண்டும்காணாமல் நாம் கடக்கிறோம்

நேர் காணல்:
அல்பேட் பெஸ்ரியன்



யாழ்ப்பாணத்தில் அருட்தந்தை எஸ் டேமியன். அ.ம.தி. உளவளத் துணையை அறிமுகப்படுத்தியதோடு 1988இல் 'சாந்திகம்' உளவளத்துணை நிறுவனத்தையும் உருவாக்கினார். கடந்த 31 வருடங்களாக மக்களுக்காக தொடர்ந்தும் உளவளத்துணையில் தொண்டாற்றிவரும் இவர் 1984இல் கனடாவில் உள்ள ஒட்டாவா பல்கலைக்கழகம், தூய பவுல் பல்கலைக்கழகங்களில் உளவளத்துணையில் மூன்றுவருட முதுமாணிப் பட்டம் பெற்றவர். மேற்படி பட்டப் படிப்பை முடித்து நாடு திரும்பியது முதல் இன்றுவரை இறைபணியையும் உளவளத்துணையையும் தொடர்ந்து வருகிறார்.

**கேள்வி:** 'சாந்திகம்' உளவளத்துணை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

**பதில்:** இனப்பிரச்சினை ஏற்பட்ட காலப்பகுதியிலேயே காணாமல் போதல்களும், ஆள் கடத்தல்களும் ஆரம்பித்துவிட்டன. PTSD என ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொல்லப்படும் நெருக்கீட்டுக்கு பிற்பட்ட மனவடு போன்ற சிக்கலான உளநல குறைபாடுகள் உடையோர் சமூகத்தில் அதிகரிக்கத் தொடங்கிய நிலையில் உள்நாட்டு போரின் இறுக்கமான காலகட்டமான 1987ஆம் ஆண்டளவில், பாதிப்புக்கு உள்ளானவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் முதல்முதலாக மருத்துவபீட மாணவர்களுக்கு 21 நாட்கள் உளவளத்துணை பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்தேன்.

1988 ஆம் ஆண்டு அமெரிக்க மனநல மருத்துவர் அன்னா டோனி, மருத்துவர்கள் சிவராஜா, அனிட்டா, நச்சினார்க்கினியன், சிவசங்கர், அருட்சகோதரிகள் விக்டோரியா, ஜசிந்தா மேரி மற்றும் ஸ்ரீவ் - ஷெரோமி தம்பதிகள் ஆகியோருடன் இணைந்து 'சாந்திகம்' எனும் உளவள ஆற்றுப்படுத்தும் நிறுவனத்தை தொடங்கினேன்.

**கே:** 'சாந்திகம்' பயனாளர்களுக்கு எவ்வாறான சேவையை வழங்குகிறது?

**ப:** 'சாந்திகம்' நிறுவனம் மூலம் எமது சமூகத்தில் பல்வேறு நிலைகளிலும் வாழும் மக்களுக்கு ஏற்படுகின்ற மனநல பிரச்சினைகளுக்கு உளவளத் துணையும் மருத்துவ பரிந்துரைகளையும் மேற்கொள்வது போன்ற சேவைகளையும் உளவளத்துணை கற்கைநெறிகளையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம். தற்போது இந்நிறுவனத்தால் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் (Office for National Unity & Reconciliation) எனும் செயற்றிட்டம் ஊடாக உள சமூக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

**கே:** உங்களின் உளவள ஆற்றுப்படுத்தல் சேவை பற்றி?

**ப:** இந்நிறுவனத்தில் பணிபுரிவதைத் தவிர, 1987ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவபீட மாணவர்களுக்கு உளவளத் துணை கற்கைநெறியைப் பயிற்றுவித்தேன். 1992ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியல் துறையில் மருத்துவ உள வளத் துணையாளராகப் பணியாற்றினேன். 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்த நிலைமைகள் மிகவும் மோசமடைந்தது. இந்நிலையில் UNICEF நிறுவனத்தின் வேண்டுதலின் பேரில் 'சுகவாழ்வு' எனும் உளவளத்துணை நிறுவனத்தை தொடங்கி யுத்தப்பாதிப்புக்கு உள்ளாகி மனநலப்பிரச்சினைகளுக்கு உள்ளானவர்களை ஆற்றுப்படுத்தினோம்.

இந்நிறுவனத்தில் 2006ஆம் ஆண்டுவரை இயக்குநராகச் சேவையாற்றினேன். பருத்தித்துறையில் தொடர்ந்து இறைபணியாற்ற வேண்டியிருந்ததால் 2006ஆம் ஆண்டளவில் 'அஞ்சலியகம்' எனும் உளவளத்துணை நிறுவனத்தைத் தொடங்கினேன். அங்கு 10 வருடங்கள் உளவளத்துணை சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டேன். தற்போதும் வசந்தகத்தில் இயக்குநராக பணியாற்றுவதுடன் சாந்திகத்துடன் இணைந்து உளசமூக சேவைகளை முன்னெடுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தில் (Office for National Unity & Reconciliation) நிர்வாக சபை உறுப்பினராகவும் உளவளத்துணை மாணவர்களுக் கான மேற்பார்வையாளராகவும் கடமையாற்றி வருகிறேன். சாந்திகத்திலும் ஆலோசனைக்குழு உறுப்பினராக தொடர்ந்தும் கடமையாற்றுகிறேன்.

**கே:** 'அஞ்சலியகம்' உளசமூக மேம்பாட்டு நிலையத்தில் பணியாற்றியமை பற்றி..?

**ப:** யாழ். தும்பளை, பருத்தித் துறையில் அமைந்துள்ள அஞ்சலியகத்தில் கடந்த 10 வருடங்களாகப் பணியாற்றினேன். அங்கு பணிபுரியத் தொடங்கிய போது பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்நிறுவனத்தில் கணவனை இழந்து இழப்பின் துயரில் இருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பல்வேறு காரணங்களால் கணவனை பிரிந்து வறுமைக்கோட்டுக்குட்பட்டு வாழும் பெண்கள் மற்றும் விதவைகள் என 90 பெண்களைத் தேர்ந்தெடுத்து குழுச்சிகிச்சை முறைகளை கொடுத்தோம்.

அவர்களை 9 குழுவாகப் பிரித்து இயங்கச் செய்தோம். அவர்களது பிள்ளைகளை கவனமெடுத்து படிப்பில் ஊக்குவித்தோம்.

அத்துடன் அவர்களுக்கான மாலைநேரக் கல்வியைத் தொடங்கினோம். தனிப்பட்ட ரீதியில் குடும்ப தரிசிப்புகளை மேற்கொண்டு உளவளத் துணை யாளர்கள் ஆற்றுப்படுத்தலை முன்னெடுத்தனர். இதற்கு பல நிறுவனங்களின் உதவி புரிந்தன. குறிப்பாக MJF Charitable Foundation மற்றும் டில்மா இந்த சேவையின் தன்மையை உணர்ந்து வாழ்வாதாரத் திட்டங்களை ஏற்படுத்தி இச்செயற்பாட்டுக்கு உதவி வருகின்றனர். மேலும் அந்தப் பகுதியில் வாழும் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளை ஒன்றிணைத்து விளையாட்டு மற்றும் கலைகளினூடாக (Art therapy & Play Therapy) ஆற்றுப்படுத்தலை மேற்கொண் டோம்.

இதனூடாக அச்சிறார்களை முன்னேற்ற முடிந்தது. அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள 35க்கும் மேற்பட்ட ஆசிரியர் களுக்கு 6 மாத கால உளவளத் துணை பயிற்சி வகுப்புக்களை நடத்தினோம்.

**4.2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரான சமூகத்தை எப்படி பார்க்கிறீர்கள்?**

எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் இனப்பிரச்சினை தொடங்கியது முதல் தற்போதுவரையுள்ள சூழலில் மாற்றம் ஏதும் ஏற்பட்டதாக நான் கருதவில்லை. பிரச்சினை களின் வடிவங்கள் மாறுகின்ற னவே தவிர அவை முற்றாகத் தீர்க்கப்படவில்லை. ஒரு பூதம் விழுங்கி விட்டது போன்ற தொரு நிலையே தற்போது காணப்படுகிறது. Collective Trauma என உளவியல் பதத்தில் குறிக்கப்படும் கூட்டு உளவடுவுக்கு ஆட்பட்டவர்களாக எமது சமூகத்தை காண்கிறேன். இது அர்ப்பணிப்பில்லாத வாழ்க்கையை ஏற்படுத்தி விட்டது.

மக்கள் குறிப்பாக இளையோர் கள் செயல்பாட்டை, செயல் முனைப்பை இழந்துள்ளார்கள்.

ஏதேனும் குறிக்கோளை அமைத்து அந்தப் பாதையில் செல்வதற்கான உத்வேகம் தற்போதைய இளையோர் மத்தியில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. மேலும் சமூகத்தில் எல்லா நிலைகளிலும் உள்ளவர்கள் மத்தியில் ஒரு சமூகப்பற்றின்மை, கொள்கைப் பற்றில்லாத அல்லது அலட்சி யப்போக்கைக் கொண்ட வாழ்க்கை முறைறையைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு காலத் தில் கட்டிக்காக்கப்பட்ட விழுமி யங்கள் சிதைந்து போய்விட்ட பின்பு யாரும் எதையும் செய்ய லாம் கேட்பதற்கு ஒருவருமில்லை எனும் மனப்பாங்கு சமூகத்தில் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.


**கே:** தற்போது சமூகத்தில் காணப்படும் முக்கிய பிரச்சினைகள்...?

**ப:** மது - போதைப்பொருள் பாவனை, வன்முறை மற்றும் நவீன தொழில்நுட்ப / இணையத்தினூ டான முறையற்ற நடவடிக்கைகள் போன்றவை தற்போது எமது சமூகத்தில் குறிப்பாக இளையோர் மத்தியில் தாக்கம் செலுத்தும் பிரதான சவால்களாகக் காணப்படு கிறது. இவை கற்றலில் ஈடுபாடின்மை, வன்முறையில் ஈடுபடுதல், விலகல் போக்குகள், முறையற்ற பலதார திருமணங்கள் உதாரணமாக: சட்டபூர்வமற்ற முறையில் ஒரு நபர் இரண்டு அல்லது மூன்றுபேர்களை திருமணம் செய்தல்

(18ஆம் பக்கம் பார்க்க)

# பரணீதரனின் "அல்வாய் சண்டியன்"

■ எம்.கே.முருகானந்தன்




. "சிறுகதை, கவிதை, நாவல் போன்ற புனைவுகளின் மீதான ஆர்வம் குறைந்து செல்கிறது" என மிகச் சிறந்த கவிஞரும் இலக்கியவாதியுமான நண்பர் அ.யேசுராசா அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இருந்த போதும் தேர்ந்த இலக்கியவாதியே இப்படி சொல்லும்போது சாதாரண ரசிகனான என் போன்றவர்களின் நிலைமை எப்படி இருக்கும் எனச் சிந்திக்கத் தோன்றியது.

காரணம் என்னவாயிருக்கும்? எமது வயது காரணமாக இருக்குமா? அல்லது பெரும்பாலான புனைவுகள் செக்கு மாடுகள்போல சலிக்க வைக்கும் ஒரே பாதையில் சுத்திச் சுத்திச் வருவதால் வாசித்து அலுத்துவிட்டது காரணமாக இருக்குமா? தெரியவில்லை. இருந்தபோதும் அண்மையில் மூன்று புத்தகங்களை ஆர்வத்தோடு படித்து முடித்தேன். ஞானம் பாலசந்திரனின் "பொய்மையும் வாய்மையிடத்து" திருமதி சோமா ஜெயகொடியின் "சித்தார்த்த யசோதரா" மற்றும் பரணீதரனின் "அல்வாய் சண்டியன்".

பரணீதரனின் நூல் சிறுகதைத் தொகுதி மற்ற இரண்டும் நாவல்கள்.

பரணீதரனின் சிறுகதைத் தொகுதியை ஆர்வமாக படிக்க முடிந்ததற்கான காரணங்கள் எவை?

சிறுகதைகள் என்பவை சிறுகதைகளாக இருக்க வேண்டும். அளவில் மட்டுமல்ல சம்பவக் கோர்வைகளிலும் கூட. நாவல்களின் குட்டிகள் போலவோ காரண காரியங்களை ஆழ்ந்து ஆராயும் கட்டுரைகள் போலவோ வளவளா என்று இருக்கக்கூடாது. பேச வந்த கருவை சுருக்கமாக அழகான மொழியில் நறுக்கென நெஞ்சில் பதியும் வண்ணம் சொல்வதுடன் வாசகனை தன்னுடன் கைகோத்து பிணைத்து அழைத்துச் சொல்வதுபோல சுவாரஸ்யமானதாக இருக்க வேண்டும். அது இந்தத் தொகுப்பில் உள்ள படைப்புகளில் நிறையவே கிடைக்கிறது.

*106 பக்கங்களை மட்டும்* கொண்ட இந்தத் தொகுதியில் பத்து சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. ஒவ்வொரு கதையும் சுமார் பத்து பக்கங்கள் மட்டுமே கொண்டுள்ளதாகக் கொள்ளலாம். அளவான சிறுகதைகள். சுருக்கமும் செறிவும் கொண்டவை. முன்னுரை வாழ்த்துரை, ஆய்வுரை. கருத்துரை என வாசகர்களான எங்களின் பொறுமையைச் சோதிக்காது அரைப் பக்க 'என்னுரை'யைத் தாண்டி நேரடியாக படைப்புகளுடன் கைகோக்க முடிகிறது.

இவருடைய கதைகள் பெரும்பாலும் போரின் காரணமான சமூக மாந்தருக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையே பேசுகின்றன. உயிரிழப்பு, உறவிழப்பு, அங்கவீனம், தனிமை, பொருளிழப்பு, வறுமை போன்ற பலவற்றைக் கதைகளூடே தரிசிக்க முடிந்தாலும் அவற்றின் ஊடுபொருளாக பெரும்பாலும் உளவியல் தாக்கங்கள் அமைவதைக் காண முடிகிறது. சக மாந்தரின் உள்ளுணர்வுகளையும் மனக்கிடக்கைகளையும் உணர்ந்து கொள்ளக்கூடிய நுண்ணறிவு கொண்ட ஒருவருக்கே இது சாத்தியமாகும். மேலதிகமாக, புத்திபூர்வமான தேடலும் இருந்திருக்கலாம். உளவியலையும் தனது பட்டப்படிப்பில் ஒரு பாடமாக பரணீதரன் எடுத்துக் கொண்டிருந்தாரோ என்பது எனக்குத் தெரியாது.

பரணீதரனின் பாத்திரங்களும் களங்களும் பலதரப்பட்டவை. வாசகர்களில் பெரும்பாலானவர்கள் போலவே இவரது கதை மாந்தர்களும் பெரும்பாலும் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. ஆசிரியர்கள் மாணவர்கள், அரச சேவையாளர்கள், மருத்துவர்கள் போன்றவர்கள். இத்தகைய பாத்திரங்களும் களங்களும் உயிரோட்டமாக இருப்பதற்கு காரணம் ஆசிரியருக்கும் நன்கு பரிச்சயமான வாழ்வும் மனிதர்களுமே அவை. அவரது வாழ்வில் காண்பவை கேட்பவை - உணர்பவை எனலாம். சொல்லும் மொழியில் சுவை இருந்தால் அனுபவம் சார்ந்த படைப்புக்கள் உயிரோட்டாக அமைவதில்லை - வியப்பில்லை.

ஆயினும் தனக்குச் சற்றேனும் தொடர்பற்ற களங்களில் அமையும் இரு கதைகளான "வெட்டியான்" மற்றும் "நினைந்ததுமற்று நினையாமையுமற்று..." ஆகிய இரு கதைகளும் மிகவும் வித்தியாசமானவை. சமூக பொருளாதார நாகரிக நிலைகளில் எட்டாத் துருவங்களில் நிற்பவை. இருந்த போதும் அவை இரண்டும் மிகவும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

"நினைந்ததுமற்று நினையாமையுமற்று..." மிகவும் வித்தியாசமான கதை. அதன் ஆரம்ப வசனங்களே புதிய சூழலுக்குள் வாசகனை ஈர்த்து ஆர்வமுடன் வாசிக்கத் தூண்டுகின்றன. "காலையில் முதலில் எதிர்ப்படுவோரைக் கண்டதும் உதிர்க்கும் good day, mate # இதழ் கரையோரம் தோன்றும் ready made புன்சிரிப்பு." இவை போதாதா கதையோடு இணைய வைப்பதற்கு.

இக் கதை முழுவதும் வித்தியாசமான புனைவாகவே இருக்கிறது. விசேட அறிவியல் நிபுணத்துவம், முதுமையின் குழந்தைத்தனம், களங்கமற்ற அன்பு, மருத்துவ அறிகுறிகள் இவற்றையே இழையோடும் நுட்பமான புதிர், எனப் பலவும் இச் சிறுகதையில் குறுகப் புனைவாகியுள்ளன. ஆனால் சிறுகதையின் வார்ப்பானது வாசகனை ஒரே மூச்சில் படித்து முடிக்க வைக்கிறது.

மற்றது வெட்டியான் என்ற சிறுகதை. பேராசிரியர் எமில் சமூக அந்தஸ்தில் ஒரு துருவம் என்றால் வெட்டியான் மூர்த்தி சமூக அந்தஸ்தில் மறு துருவம்.

ஒரு குடிகாரன் பற்றிய கதை. குடிப்பவர்களைக் கண்டாலே மருத்துவன் என்ற ரீதியில் எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வரும். உழைக்கும் காசைக் கொட்டி தங்கள் உடலைக் கெடுத்து நோயை வாங்குகிறார்களே என்றதனால். அத்துடன் தங்கள் பொருளாதார நிலையை குழிதோண்டிப் புதைப்பதுடன் மனைவி பிள்ளை குட்டிகளின் குடும்ப மானத்தை வாங்குகிறார்களே என்ற ஆதங்கம்.

ஆனால் எதற்கும் ஒரு மறுபக்கம் இருக்கக் கூடும் என்பதற்கு இக் கதை நல்ல ஒரு உதாரணம். அன்பான மனைவி, குழந்தைகள் இருந்தும் குடிக்கிறான். ஏன் குடிக்கிறான். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். பசியாற்ற வேண்டும், பாடசாலை செல்ல வைக்க வேண்டும் என்பதற்காகக் குடிக்கிறான். கேட்பதற்கு அபத்தமாக தோன்றினாலும் அதுதான் இக்கதையின் அடிப்படையாக இருக்கிறது.

கோபப்பட வேண்டிய பாத்திரத்தை மதிக்க வைக்க வைத்துள்ளமை படைப்பாளியின் திறமையைக் காட்டுகிறது.

மாணவர்களின் உலகம் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்கள் உளவியல் தாக்கங்கள் போன்றவற்றை "இடமாற்றம்" மற்றும் "அல்வாய் சண்டியன்" ஆகிய படைப்புகளில் தரிசிக்க முடிகிறது. நல்லாசிரியர்கள் எப்படி இருக்க வேண்டும் எவ்வாறு இருக்கக் கூடாது போன்றவை மறைபொருளாக வெளிப்படுகிறது. படமுடியாது இனித் துயரம் சிறுகதையிலும் பாடசாலை வாழ்வின் சில அம்சங்கள் சொல்லப்பட்ட போதும் அது பேசும் உள்ளடக்கம் முற்றிலும் வேறானது.

வெளிநாட்டுக்காரர் நாட்டுக்கு வந்து திரும்புவது பற்றிப் பேசும் படைப்புகள் இரண்டு இருக்கின்றன. வெளிநாடுகளில் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து சலித்தாலும் இங்கு வந்ததும் தங்கள் பவிசுகளைக் காட்டி உறவுகளை வாய்பிளக்க வைக்கிற பலரைப் போல அல்லாது தனது மண்ணையும் மக்களையும் உறவுகளை நேசிக்கிறவர்கள் பற்றி கதைகளாக இருக்கின்றன. உறவுகளின் நேசத்தில் மனம் நிறையும் மனிதர்களைப் பற்றிய கதைகள் இவை. உறவுகளுக்கு கைகொடுத்து உயர்த்தும் மனம் கொண்ட நல்ல மனதுள்ளவர்கள் முக்கிய பாத்திரங்களாக இருக்கிறார்கள். மீண்டும் பிரிய நேர்வது அவர்கள் மனத்தை சஞ்சலப்படுத்துகிறது.

உண்மையும் அதுதானே. வெளிநாடு சென்றவர்களின் உதவி இல்லையெனில் இங்கு பலர் நட்டாற்றில் நிற்க வேண்டியிருந்திருக்கும்.

எம் இனத்தின் விடிவுக்காகப் போராடப் புறப்பட்டு அனைத்தையும் இழந்து நிற்பவர்களை எம்மவர்கள் கண்டுகொள்ளாமலும் புறக்கணித்தும் வருவது வேதனைக்குரியது. அவர்களில் பலர் அங்கவீனர்களாகவும் வறுமையில் உழல்பவர்களாகவும் இருக்கிறார்கள். மீளப் பிறந்தவர்கள் கதை சற்று வித்தியாசமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாலதி இனத்திற்கான தன் பங்களிப்பை வெளிப்படுத்தி சகாயம் பெற விரும்பாதவளாக இருக்கிறாள். போராளிகளின் கண்ணியத்தையும் பெருமையையும் விற்பனைப் பொருளாக்கி அவமானப்படுத்த விரும்பாதவளாக இருக்கிறாள். மனதைத் தொடும் படைப்பு.

சாதீயம் ஒரு கதையில் மட்டுமே கருவாகியுள்ளது.

பரணீதரன் பல்துறை ஆளுமை கொண்டவர். படைப்பாளி, சஞ்சிகை ஆசிரியர், பதிப்பகம், இசை நாடக நடிகர் இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஈழத்து படைப்புக்களை ஆவணமாக்கும் பணியில் தன்னை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தியுள்ளார்.

இவ்வளவு பணிகளுக்கும் இடையில் படைப்புலகில் முழுமையாக ஈடுபடுவது அசாத்தியம் என்றபோதும் படைப்பின் மீதான ஆர்வமும், படைப்புலகில் தனது இருப்பை உறுதிப்படுத்தியுள்ளமைக்கு இந்தத் தொகுப்பு சான்றாக அமைகிறது. சிறுகதை உலகில் தனது ஆற்றலை மேலும் மெருகுபடுத்திக் கொண்டால் ஈழத்து முன்னணி படைப்பாளிகளில் ஒருவராக வருவது நிச்சயம்.

அழகான வடிவமைப்பு. வாசிப்பதற்கு இதமான தமிழ் பொண்ட். ஜீவநதி வெளியீடு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் ஜீவநதி பதிப்பகத்தின் நூல்கள் அனைத்துமே அழகான வாசிப்பதற்கு இதமான வடிவமைப்பை கொண்டவையாக இருப்பதுதான்.

## சத்திய...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

'இந்தப் போராட்ட வரலாற்றில் எம்மைப் பாதுகாத்தவர் நீங்கள் உணவு தந்தவர் நீங்கள், நோயுற்ற வேளையில் பராமரித்தவர்கள் நீங்கள், தேவை என்றால் இரத்தம் தந்தீர் மீட்பு நிதி என்றதும் நகையைத் தந்தீர், இறுதிப் போர் என்றதும் பிள்ளைகளைத் தந்தீர். இன்று தலைவன் இல்லாத நிலையில் உங்களுக்கு மட்டுமே நாம் விசுவாசமாக இருக்க வேண்டும். ஆயிரம் தடவை சொல்கிறோம் அவர் எங்கள் மனதில் மட்டுமே வாழ்கிறார்.

தமிழகத்தில் வைகோவிடம், அவரைத் தமிழினம் இழந்துவிட்டது என்று சொன்னதும் விம்மி விம்மி அழுததாக எனது நெருங்கிய நண்பர் எனக்குச் சொன்னார். அவரையும், நெடுமாறன் ஐயாவையும், காசி அண்ணாவையும் ஏமாற்றி விட்டனர். அவர்கள் அனைவருக்கும்தான் இந்த வருத்தமான செய்தியை உறுதிப்படுத்துகிறேன். என் மீது மேற்கொள்ளப்படும் எந்தச் சேறடிப்பையும் செருப்படியையும் ஒரு பொருட்டாக மதிக்கப்போவதில்லை. உண்மையையா எமக்கு விருப்பமானதையா என்ற கேள்வி வரும்போது உண்மையின் பக்கம் நிற்போர் எங்களுடன் கைகோத்துக் கொள்ளுங்கள்.

இது சத்தியசோதனை தான்! விடுதலைப் புலிகளை ஒரு குற்றவியல் அமைப்பு அல்ல எனத் தெரிவித்தமைக்காக சுவிஸ் அரசுக்கு நன்றி சொல்வோம். தண்டனை கிடைக்க வேண்டுமென எதிர்பார்த்த சக்திகளுக்குள் சில ஊடகங்களும் அடக்கம். அவர்களுக்கு ஏமாற்றம்தான்... அவ்வாறான ஏமாற்றம் தொடரட்டும்.

## இத்தாலியில்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டத்தட்ட கைதி போல நடத்துகின்றனர். எனவே, எங்களுக்குச் சொந்தமான பூமியில் எங்களை வாழவிடுங்கள்" என்று கூறுகிறார்கள். அவர்களை மன்னித்து, அவர்களின் ஊர்களில் வாழ இலங்கை அரசாங்கம் அனுமதிக்கிறது. அவர்கள் சில மாதங்கள் கழித்து பிரிட்டன், கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று, விடுதலைப் புலிகளுடன் ஐக்கியமாகிவிடுகிறார்கள்" என்ற தகவலும் இலங்கை வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

ஆனால், இந்தத் தகவலை விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகள் மறுக்கின்றன. "மத்திய உளவுத்துறையால் கிளப்பிவிடப்படும் வதந்திகள்தான் இவை. ஏழு தமிழர்கள் விடுதலைக்குத் தடையாக இந்த விவகாரத்தைக் கிளப்புகிறார்கள். பொட்டு அம்மான் இத்தாலியில் இருக்கிறார் என்றால், இத்தாலி அரசாங்கத்திடம் கேட்டு அவரை இந்தியாவுக்கு நாடுகடத்தி அழைத்து வரவேண்டியதுதானே? ராஜீவ் கொலை வழக்கில் பெயர் உள்ள குமரன் பத்மநாபன் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் 9 ஆண்டுகளாக இருக்கிறார். அவரை இந்தியாவுக்கு அழைத்து வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஜெயின் குழுவின் விசாரணையை மீண்டும் தொடங்கினால், ராஜீவ் வழக்கின் பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிடும். துணிச்சல் இருந்தால் ஜெயின் குழுவின் விசாரணையைத் தொடரட்டும்" என்கிறார் இயக்குநர் கௌதமன்.

## உளக் காயங்கள்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது சேர்ந்து வாழ்தல், துஷ்பிரயோகங்கள், விவாகரத்துகள் போன்ற கலாசார சீரழிவுக்கு இட்டுச் செல்கிறது.

இவ்விடயங்களிலேயே நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஏனெனில் இவை வருங்காலத்தில் சமூகத்தில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இது மட்டுமின்றி வேறு பல பிரச்சினைகளும் சமூகத்தில் புரையோடியுள்ளன. உதாரணமாக இறுதி யுத்தத்தில் பாதிப்புக்குள்ளாகி மனவடுவுக்குட்பட்டவர்கள், மனச்சோர்வு போன்ற உளபாதிப்புக்கு உள்ளானவர்கள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என பட்டியல் பெரிது.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய 25,000 பேருக்கு மேல் உள்ளனர். அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்று தெரியாமல் அவர்களுக்கான அவர்களின் குடும்பங்களுக்கு ஒரு தீர்வு இதுவரை இல்லாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஒரு வருடத்துக்கு மேல் காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் இந்த விடயம் தொடர்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதுபோல உளக் காயங்கள் முடிவில்லாமல் தொடர்ச்சியாக போய்க் கொண்டுள்ளது. அதைக் கண்டும் காணாமல் நாம் கூட கடந்து போய்க் கொண்டிருக்கிறோம். இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு இரண்டு பக்கத்துக்கும் உண்டு.

தங்களுக்கு முன்னால் தமக்கு உரியவர்களை பிடித்துக் கொண்டு போனார்கள் என்று இன்னும் அதற்கு முடிவில்லை என்று பாதிக்கப்பட்டோர் இப்பொழுதும் சொல்கிறார்கள். இவர்களோடு நாம் நீண்ட காலமாக பயணித்து அவர்களுக்கான வாழ்வாதார திட்டங்களை வகுத்து கொடுத்து ஓரளவுக்கு அவர்களை தேற்றியிருக்கிறோம். ஆனால் பிரச்சினை ஆறாத புண்ணாக இருந்து கொண்டே இருக்கிறது. சில அனுகூலங்களை' பெறுவதற்காக குறிப்பாக இறப்புச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை போன்றவற்றை பெறுவதற்காக காணாமல் போய்விட்டார் (Certificate of Missing) என்ற ஆவணம் கொடுக்கிறார்கள்.

அது என்னைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இதனால் ஒரு சில அனுகூலங்கள் கிடைக்குமே தவிர கணவனை இழந்த பெண்ணின் இழப்பை அது ஈடுசெய்யாது, பத்து பதினைந்து வருடங்களுக்குப் பிறகு வளர்ந்த பிள்ளைகளுக்கு அவர்களது தந்தை பற்றி என்ன சொல்ல இயலும்? குடும்ப மட்டத்தில் - சமூக மட்டத்தில் அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் எத்தனை? காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் தீர்வென்பது அரசாங்கத்தின் கையிலேயே உள்ளது.

**கே:** இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன?

**ப:** எம்மிடையே காணப்படுகின்ற பிரச்சினைகளை அல்லது சவால்களை முதலில் நமது சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும். பாரிய அளவில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் குழுக்களை அமைத்து கிராமம் கிராமமாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக உடல், உள, உணர்வு ரீதியான பாதிப்புகள் பற்றியும் தனிநபர், குடும்பம், சமூகம் என ஏற்பட்டுள்ள தாக்கங்கள் போன்றவற்றை உளக் கல்வி மூலம் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக இளைஞனுக்கும் வழங்கப்பட வேண்டும்.

தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உளவளத்துணையாளர்கள் உள்ளனர். பாதிப்புக்கு உள்ளானவர்கள் அல்லது அவர்களை இணங்கண்பவர்கள் உளவளத் துணையாளர்களை அணுகலாம். இதன் மூலம் அவர்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதுடன் வேண்டிய பரிந்துரைகளையும் செய்யலாம். தற்போது தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் தொடர்ந்து இவ்வுள சமூக வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

பிரச்சினைகள் அதிகம் காணப்படுகின்ற இடங்களில் கணிசமான அளவு பிரச்சினைக்கு உரியவர்களை இனங்கண்டு ஆற்றுப்படுத்தல் - செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். சமூகப்பிரச்சினைகளை குறிப்பிட்ட துறைகள் அல்லது நிறுவனங்கள் முற்றாகக் களைந்து விடமுடியாது. எனவே அனைவரும் சமூகப் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவது காலத்தின் கட்டாயம்.

**கே:** இளையோர்களுக்கு வழிகாட்டுவதில் உள்ள சவால்கள் என்ன?

**ப:** தற்போதைய சூழலில் க.பொ.த சாதாரண தர (O/L) மாணவர்களே யாருடைய அறிவுரைகளையும் கேட்பதற்கு தயாராக இல்லை. அநேக பெற்றோர்களுக்கு பிள்ளைகளில் கட்டுப்பாடு இல்லை. அவர்களில் மிகுந்த அக்கறை காணப்பட்டாலும், அதிகாரத்தால் அவர்களை இழந்து விடக்கூடும் என்ற அச்சம் அவர்களிடத்தே உள்ளது. எனவே அவர்களுக்கு பயப்படுகிறார்கள். இவ்வாறான நிலையில் பெற்றோர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்புகின்றனர். பிள்ளைளுடன் இறுக்கமான உறவைப் பேணிக் கொள்வதுடன் நற்புறவை ஏற்படுத்தி அவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு செயற்படுவது ஆரோக்கியமான சூழலுக்கு வழிவகுக்கும். வாழ்வின் பல்வேறு நிலைகளை எதிர்கொள்ளக் கூடிய அனுபவத்தையும் - பார்வைகளையும் விஸ்தரிக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

**கே:** இளையோரை எவ்வாறு சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்றமுடியும்?

**ப:** தற்போதுள்ள இளைஞர்களை உரியமுறையில் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரின் கடப்பாடாகும். நாங்கள் வன்முறைக் கலாசாரத்துக்குள் அகப்பட்டு விட்டோம். தலைமைத்துவம் பிழைத்து விட்டது. நாம் குழுக்களாகப் பிரிந்து கொண்டு ஒருவரையொருவர் குறைகூறுவதால் எம்மிடையே ஏற்பட்டுள்ள பிளவுகள் அதிகரிக்குமே தவிர ஆரோக்கியமான சூழல் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே அனைவரும் இணைந்து பிரச்சினைகளைச் சீர்செய்வதற்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் அப்போதுதான் நாளைய தலைவர்களை உருவாக்க முடியும். தற்போதுள்ள அரசியல்வாதிகள் தங்களுக்குப் பின் இந்த மக்களுக்கு எதை விட்டுச் செல்லப் போகிறார்கள் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். போலி அறிக்கைகளிலும் மாயைகளிலும் மக்களை திசை திருப்புவதை தவிர்த்து யதார்த்த வாழ்க்கை சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவ வேண்டும். மாற்று வழிகளை கையாண்டு நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்பவும் மக்கள் மனங்களையும் அவர்களின் அபிலாசைகளையும் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். ●

# ஆரிட்டை சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## தேரவாதம் + தேசவாதம் + இனத்துவேஷம்



கலகொட அத்த ஞானசார தேரரை விடுதலை செய்யச் சொல்லி மூன்டு பௌத்தபீடத் தேரர்கள் ஆர்ப்பாட்டம் எண்டது செய்தி. ஆனால் இது கனக்க நடந்திருக்கு அம்பாறையிலை மட்டுந்தான். மற்ற இடங்களிலை உள்ள தேர பீடங்கள் அவ்வளவா இல்லை.சத்தம் போடாமல் இருக்கினம். ஏன் சத்தம் போடாமல் இருக்கினம் எண்டது பெரிய கேள்வி.

இதுக்கை தேரருக்குக் குடுத்த தண்டனையை பற்றி நினைச்சுத் தான் வருத்தப்படுகிறதா பிரதி நீதி, பொது நிர்வாக அமைச்சர் நலின் பண்டாரா சொல்லி இருக்கிறார். அதோடை அவர் இன்னமும் ஒண்டையும் சொல்லி இருக்கிறார். அது என்னவெண்டால் நீதி தேவதை கண்ணை மூடிக் கொண்டிருக்கிறதாலை ஆக்களை இன்னார், இன்னார் எண்டு பாராமல் அவை செய்த அடாவடித்தனங்களையும் அது எவ்வளவு முறைகேடு எண்டு பாத்துத்தான் கோடு தண்டனையைக் குடுத்திருக்கு. எப்பவும் அரசாங்கம் நீதி மன்றத்தின்ரை விசியங்களிலை தலை இடாதபடியால் மனவருத்தப்படுகிறதைத் தவிர தன்னாலை ஒண்டும் செய்யேலாமைக் கிடக்கு.தேரர் கோஷ்டியள் மன்னிக்க வேணும் எண்டும் அவர் சொல்லி வருத்தப் பட்டிருக்கிறார். அவருக்கு மட்டுமில்லை எல்லாருக்கும் வருத்தம்தான். அதுவும் காவி உடுப்போடையும்,மத அடையாளங்களோடையும் ஒருத்தரை ஜெயிலுக்கு அனுப்பிறதெண்டால் மனம் கஷ்டப்படாமல் என்ன செய்யும். அதுவும் மஞ்சள் சீலையைக் கழட்டிப்போட்டு வழமையாக் குற்றவாளியள் போடுற கோட்டுச் சட்டையளைப் போட்டுக் கொண்டு வரிசையிலை நிண்டு சாப்பாட்டை வேண்டித் தின்னிறதை யோசிச்சால்..! உண்மையா இந்த நிலைமை ஆருக்கும் வரப்பிடாது.

ஆனால் தேரர் சும்மா இருக்காமல் ஏன் கோடு கீடு எண்டு போறார் எண்டு எங்களுக்குத் தெரியேல்லை. சிவனே எண்டு விகாரையள் கனக்க இருக்கு. காணாது எண்டு இன்னும் கட்டிக் கொண்டிருக்கினம். அதுவும் காணாது எண்டு தமிழற்றை காணி பூமியளையும் பிடிச்சுக் கட்டிக் கொண்டிருக்கினம். அதோடை கண்ட கண்ட இடங்களிலையும் அரச மரத்தை வளர விடேலாமல் கிடக்கு. அரச மரக் கொட்டை வெடிச்சு முளை வந்த உடனை ஆரேன் புத்தகுரு இல்லாட்டி ஆமிக்காரன் கண்டால் உடனை ஒரு சோக்கட்டி மாவிலை செய்த புத்தற்றை சிலை ஒண்டை வைச்சுக் கும்பிடத் துவங்கி, அதுக்கு ஒரு கதையையும் உண்டாக்கி. சங்கமித்தை உதிலை வந்துதான் பித்தச் சத்தி எடுத்தது எண்ட கதையையும் சேத்து எழுதிப்போடுவங்கள். அப்ப அப்பிடி எல்லாம் விகாரையள் கிடக்குது. அதோடை பாவம் சிங்களச் சனம் தானம் எண்டு சொல்லி உவையளைக் கூப்பிட்டு வயிறு முட்டத் தின்ன வாய்க்கு ருசியாகச் சமைச்சும் குடுக்குதுகள். அதைத் திண்டிட்டு சிங்களச் சனத்துக்கு நல்ல பழக்கங்களையும் சொல்லிக் குடுத்துக் கொண்டு இருக்கிறதை விட்டிட்டு "மவ் பிம" வைக் காப்பாற்றப் போறம் எண்டு ஏன் வெளிக்கிடுறியள். கோத்தா சொல்லிப் போட்டார் எண்டு ஹோமகம கோட்டடியிலை போய் அந்தப் பாவப்பட்ட புருசன் இல்லாத எக்னலிய கொடவின்ரை பெண்சாதியோடை உமக்கு என்ன நாட்டாமை வேண்டிக் கிடக்கு.

இப்ப ஆரோ சொல்லிப் போட்டினம் எண்டு சும்மா சேட்டை விடப்போய் கடைசியா பௌத்த சமயத்துக்குக் கேடு வந்ததே ஒழியத் தேரர் ஒண்டையும் புதுசாச் செய்யேல்லை. சமயம் சமயமா இருக்கட்டும். அரசியல் அரசியலா இருக்கட்டும். நாட்டாமை நாட்டாமையா இருக்கட்டும். ஒண்டுக்கை ஒண்டைக் கலவாதையுங்கோ. கலப்படம் எப்பவும் கேடெண்டு தெரியுமெல்லே? அப்ப கடைசியா நட்டப்படுகிறது மக்கள்தானே?

பாருங்கோவன் இன்னும் பிக்குமார் திருந்திற நோக்கமில்லை. ஞான தேரர் கைதுக்குக் காரணம் புலம் பெயர் தமிழர்கள்தான் எண்டு ஒரு பிக்கு சங்கத்தின்ரை உறுப்பினர் இந்துரங்கறே தர்மரத்தின தேரர் சொல்லுறார். உதுக்குப் பின்னாலை தமிழற்றை பெரிய சதியே இருக்கு. நாட்டை பிளவு படுத்தவே தேரரைச் சிறையிலை வைச்சிருக்கு எண்டு சொல்லுற பிக்குவுக்கு... இல்லைத் தெரியாமல் கேக்கிறம். ஏன் ஞானசார தேரரிட்டையே இலங்கையின்ரை உறுதி கிடக்கு. அவரைச் சிறையிலை வைச்சிட்டுத் தமிழர் கள்ள உறுதி எழுத?

அந்தத் தென்னிலங்கைச் சிங்களப் பேப்பர்காரரைக் கொலை செய்தது ஆர் எண்டது எல்லாருக்கும் தெரியும். அவற்றை பெண்சாதியைக் கோட்டிலை வைச்சுத் தேரர் வெருட்டின கதையும் எல்லாருக்கும் தெரியும். அப்ப ஏன் தேரற்றை கைதுக்கும் நாட்டைப் பிரிக்கிற கதைக்கும் முடிச்சுப் போடுறியள். அப்ப உது அறிவில்லாமல் அடாவடியாகக் கதைக்கிற கதை எல்லே? எல்லாத்திலையும் உப்பிடித்தானே கதைக்கிறியள். என்னத்தை எடுத்தாலும் கடைசியாத் தமிழன்ரை தலையிலை மிளகாயை வைச்சு அரைக்கிறதுதான் வேலையாப் போச்சுது. பிக்குமாரே நீங்கள் திருந்த மாட்டியள். உங்களைத் திருத்தச் சிங்கள அரசியல்வாதியளும் விடமாட்டினம். உப்பிடியே நீங்கள் கிடந்து ஒரு தரமில்லாத சிங்களக் கலாசாரத்தை உருவாக்கப் போறியள். ஆபத்து நாட்டுக்கும் சிங்களச் சனத்துக்கும்தான் எண்ட உந்த அநியாயத்தை ஆரிட்டைச் சொல்லி அழ?

**கோளரங்கன்**

# சாவு ருசி கண்ட பொலிஸார்

சாவு எத்தகைய துன்பம் - துயரம் - கவலைகளை தரவல்லது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நரை, திரை தோன்றி இயற்கையாக இறக்கும் ஒருவரின் இழப்பையே நம்மால் தாங்க முடிவதில்லை. நொந்து விடுகிறோம்.

ஆனால், நாம் இத்தகைய சாவுகளை மட்டும் கடந்து வரவில்லையே. பல அவலச்சாவுகளை அரசின் படைபலத்தின் கொடூர கொலை முகத்தைப் பார்த்து வந்தவர்கள். அதை இப்போது வேறுவடிவில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மாதா கோவில் அருகாமையில் பொலிஸார் சுட்டதில் பாக்கியராசா சுதர்சன் (வயது - 32) என்பவர் பலியானார். வாள்வெட்டுக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் உயிரிழந்தார். இதேபோன்று



கடந்த ஆண்டு வடமராட்சி வல்லிபுரத்திலும் மணல் ஏற்றி வந்த இளைஞர் ஒருவர் பொலிஸா ரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதற்கும் முந்தைய ஆண்டு 2016 ஒக்ரோபர் கொக்குவிலில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். கடந்த காலங்களில் பெரும் யுத்தத்தைக் கண்டவர்கள் அந்தக் கொடுங் காலத்துக்குள் பல இளைஞர்களை இழந்தது எம்மினம். இப்போது மீண்டும் அரச எந்திரத்தின் கொலை வெறிக்கு இலக்காகிக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டின் 5 மாதங்களில் மட்டும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 33 பேர் பலியாகினர் என்கிறது தரவு. இதில் 24 பேர் குற்றவாளிப் பட்டியலில் உள்ளவர்கள். மிகுதிப் பேர் தொடர்பில் விசாரணைகளே இடம்பெறுகின்றன.

குற்றவாளிகள், வாள்வெட்டு, மோதல் கும்பல்களை அடக்கப் பல வழிமுறைகள் உள்ளன - போதைப் பொருள் கடத்தல்காரர்கள், பாலியல் குற்றவாளிகள், ஏன் கொலைகாரர்களை கைது செய்யத் துணியாத பொலிஸாரின் துப்பாக்கிகள் சாதாரணர்களின் பக்கம் நீள்வது சாவு ருசி கண்டதாலோ...?

# நீந்திக் கடந்த நெருப்பாறு 32

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

■ நா.யோகேந்திரநாதன்



சற்று நேரத்தில் முருகேசர், கதிரேசு, கடைக்கார முத்தையா, முருகரப்பு, சோமர் எனப் பலரும் வந்து சேர்ந்துவிட்டனர். பார்வதி அவர்களைக் கண்டதும் எல்லோருக்கும் சேர்த்து அரிசி போட்டாள். வேலாயி மரக்கறிகளை எடுத்து வெட்டி ஒரு சாம்பார் செய்யும் வகையில் தயார்ப்படுத்தினாள்.

முருகேசர் கூட்டத்தினர் ஆலமர நிழலில் ஓர் ஓரமாகப் போய் இருந்து கொண்டனர். எல்லோருமே வெகு விரைவில் பாலம்பிட்டிக்குத் திரும்பிவிட முடியும் என நம்பினர். ஆனால் அது எப்போது என்பதை ஊகிக்க முடியாமல் அவர்கள் தடுமாறினர்.

முருகேசர் ஒரு பெருமூச்சுடன் சொன்னார், "இரண்டு பிள்ளையள் வெளிநாட்டிலை உழைச்சுமென்ன? கடைசியாய் ஆலமரநிழல் தான் கிடைச்சுது!", என்றார்.

முருகர் ஒரு கேலிச்சிரிப்புடன், "ஒரு பொடியனை எண்டாலும் போராட விட்டிருந்தியெண்டால் சில வேளை ஊரை விட்டு ஓடி வேண்டி வந்திராது", எனச் சொன்னார்.

முருகேசர் பாய்ந்தார், "இப்ப என்ரை ஒரு பொடியன் இல்லாதது தான் பெரிய குறை?"

"உன்ரை ஒரு பொடியன் மாதிரி, கன ஒரு பொடியள் சேர்ந்தால் ஒரு படையல்லே?"

முருகேசர் எதுவுமே பேசவில்லை. முருகரப்புவை ஒரு முறை முறைத்துப் பார்த்தார்.

அந்த நேரத்தில் பரமசிவம், "அதை விடு முருகரப்பு, எப்ப வீட்டுக்கு திரும்புவம் எண்டு நீ நினைக்கிறாய்?" எனக் கேட்டார்.

"நீ இருந்து பார் ஒரு கிழமையிலை எங்கடை பொடியள் விளாசித் தள்ளி விடுவாங்கள். பிறகு நாங்கள் ஊரிலை போய் நிம்மதியாய் இருக்கலாம்".

"ஒரு கிழமையிலை முழு மிளகாய்க் கொப்புகளையும் குரங்குகள் முறிச்சுப் போடும். பழங்களக் கிளியள் விடாது", என்றார் பரமசிவம் ஏக்கத்துடன்.

இப்படியாக ஒவ்வொருவரும் தமது சோகங்களை மற்றவர்களு டன் பகிர்ந்து கொண்டனர். ஒரு மணியளவில் சமையலும் முடியும் நிலையை நெருங்கி விட்டது.

அதைக் கவனித்து விட்ட சுந்தரம், "முத்தம்மா.. மேசைக் கத்தியை எடுத்து வா.. குளத்திலை போய் சாப்பிடத் தாமரை இலை வெட்டி வருவம்", என்றான்.

அவளும் கத்தியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். சுந்தரம் நீருக்குள் இறங்க அவளும் பின்னால் போனாள். "பாவாடை நனையப் போகுது. மடிச்சுக் கட்டிப்போட்டு இறங்கு", என்றான் சுந்தரம்.

அவள் கேலியாக முகத்தைச் சுளிச்சுவிட்டு, "என்ரை பாவாடையிலை அவ்வளவு அக்கறையே... அது நனையட்டும்", என்றாள்.

"அது பாவமில்லை. நீ பாவம் ஈரத்தோட திரிவாய் எண்டதுக்குச் சொன்னன்"

"நான் ஈரப்பாவாடையோட நிண்டால் எனக்கு தடிமன் வராது"

"அப்பிடியே.. தடிமன் வந்தால் நல்லது தானே!"

"நான் தடிமனிலை அவதிப்பட்டால் உங்களுக்கு நல்லதே?", அவள் பொய்க் கோபத்துடன் கேட்டாள்.

"பின்னை.. நான் தொண்டையிலையும் நெத்தியிலையும் சித்தாலேப போட்டு விடலாமெல்லே?"

"தொட விட மாட்டன். இப்ப இலையை வெட்டுங்கோ"

"தடிமன் வரட்டும். தொடுறனோ இல்லையோ பார்", எனச் சிரித்துக்கொண்டு சொல்லிவிட்டு அவன் இலைகளை வெட்ட ஆரம்பித்தான். அவள் வாங்கி தன் கைகளில் அடுக்கிக் கொண்டாள். இருவரும் திரும்பி வந்த போது பார்வதி சோற்றை ஒரு பெரிய சட்டியில் போட்டு சாம்பாரை ஊற்றி நன்றாகப் பிசைந்து கொண்டிருந்தாள்.

சுந்தரம் இலைகளைக் கொண்டு போய் ஒவ்வொருவரிடமும் கொடுக்க அவர்கள் அவற்றை வாங்கிக் கொண்டு பார்வதியைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். அவள் உருண்டைகளாகத் திரட்டி ஒவ்வொரு இலையிலும் வைத்தாள்.

முருகர், "இரவைக்கும் அன்ன தானம் இருக்குமோ?", எனக் கேட்டார்.

"அரிசி முடியுமட்டும் இருக்கும்.. அதுக்குப் பிறகு வேறை வழி பாப்பம்" என்றார் பரமசிவம்.

"அரிசி முடிய முந்தி ஊருக்குப் போடுவம்", என்றார் முருகேசர் மிகுந்த நம்பிக்கையுடன்.

அவர்கள் எவருமே காலையில் எதுவுமே சாப்பிடவில்லை. பார்வதியின் சோற்றுக் குழையலை உண்டு முடித்ததும் அவர்களையறியாமலே உடலை ஒருவித சோர்வு பற்றிக் கொண்டது. பரமசிவம் தான் கொண்டுவந்த பாய்களை எடுத்து தன் நண்பர்களிடம் கொடுத்தார்.

எல்லோருமே ஆலமரச் சருகுகளைத் தடிகளால் தட்டி ஒதுக்கி விட்டு பாய்களை விரித்துப் படுத்துக் கொண்டனர். ஆலமர நிழலும், குளத்து நீரை வருடி வீசிய மெல்லிய குளிர்மையான காற்றும் அந்த இடம்பெயர்ந்த அவலத்திற்குள்ளும் ஒரு சுகத்தைக் கொடுத்தன. சிறிது நேரத்தில் அனைவரும் கண்ணயர்ந்து விட்டனர்.

சாப்பிட்டு முடிந்த சுந்தரம் தாயிடம், "அம்மா.. ரேடியோவை விட்டிட்டு வந்திட்டன். போய் எடுத்து வரட்டே?", எனக் கேட்டான். "அதுக்கு இப்ப போகப்போறியே?"

"அம்மா.. நான் கவனமாய்ப் பாத்துப்போவன்.. ரேடியோ இல்லாட்டில் இருண்டது விடிஞ்சது தெரியாது", என்றான் சுந்தரம். பார்வதி சற்றும் கூட மனமின்றியே அவனுக்கு அவனின் பிடிவாதம் காரணமாக விடை கொடுத்தாள். முத்தம்மாவும்கூட அவன் போவதை விரும்பவில்லை. ஆனால் அவள் தடுக்க முயன்றால், மற்றவர்கள் தங்கள் காதலைக் கண்டுபிடித்துவிடக் கூடும் என்ற அச்சத்தில் அவள் எதுவுமே பேசவில்லை.

சுந்தரம் சென்று ஒரு அரை மணி நேரத்திற்குள்ளாகவே பாலம்பிட்டிப் பக்கமிருந்து பெரும் வெடியோசை எழுந்தது. அந்தப் பெரிய ஆலமரத்தையே அந்த ஒலி அதிர வைத்தது போல் தோன்றியது.

கிபிர் விமானம் ஒன்று காட்டு மரங்களுக்கு மேலால் சீறிக்கொண்டு பேரிரைச்சலுடன் வானை நோக்கி மேலெழுந்தது. மறுபுறத்திலிருந்து வந்த இன்னொரு விமானமும் குண்டுகளைத் தள்ளியது. மேலெழுந்த விமானங்கள் மீண்டும் ஒரு சுற்று வந்து குண்டுகளைத் தள்ளிவிட்டு வானில் மறைந்தன.

நல்ல தூக்கத்திலிருந்த பரமசிவமும் நண்பர்களும் முதல் குண்டோசையிலேயே திடுக்குற்று விழித்துவிட்டனர். அவர்கள் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நிற்கும் போதே விமானங்கள் தங்கள் வெறியாட்டத்தை நடத்தி முடித்துவிட்டு போய் விட்டன. காட்டுமரங்களுக்கு மேலால் கரும்புகை மண்டலங்கள் எழுந்து வானில் பரவின.

முருகரப்பு அவற்றைப் பார்த்துவிட்டுச் சொன்னார், "பாலம்பிட்டிப் பக்கம் தான் அடிச்சிருக்கிறாங்கள்"

பார்வதி பதைபதைப்புடன் ஓடி வந்தாள். "ஐயோ.. தம்பியல்லே.. ரேடியோவ எடுத்துவரவெண்டு அங்கை போட்டான்" அவள் அதைச் சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே பாலம்பிட்டிப் பக்கம் தொடர் எறிகணைகளின் அதிர்வுகள் கேட்க ஆரம்பித்தன.

பார்வதி நடுங்க ஆரம்பித்தாள்.

பரமசிவமும் நண்பர்களும் குளக்கட்டில் ஏறி நின்று பாலம்பிட்டிப் பக்கம் பாய்ந்தனர். எறிகணை அதிர்வுகளை விட வேறு எதையுமே விளங்கிக் கொள்ள முடியவில்லை. முருகரப்பு நன்றாகக் காதைக் கொடுத்துக் கேட்டுவிட்டு, "ரண்டு பக்கமிருந்தும் ஷெல் போகுது.. ஆமி முன்னேறப் பாக்கிறான் போல கிடக்குது", என்றார்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக் கலை

ஸ்ரீ.நதிபரன்
(யோகா போதனாசிரியர்)

**கடந்த 21 ஆம் திகதி உலக யோகா தினமாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இந்து மதத்தின் ஊற்றுக் கண்களாகவும் மனித வாழ்வியலை வளம்படுத்துகின்றனவாகவும் விளங்கும் இந்தியப் பெருங்கலை வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் யோகக்கலைக்கு காத்திரமான பங்குண்டு. மனிதப் பிறவியெடுத்த நாம், சாதாரண மனிதநிலையில் வாழமுற்படாது கடைநிலையான விலங்குநிலையிலே வாழ்ந்துவருகிறோம். இவ்விரு நிலைகளையும் தாண்டி உயர்ந்த நிலையாகிய தெய்வீக நிலைக்கு உயர்த்தும் புனிதத்தன்மை வாய்ந்த கலையாக யோகக்கலை மிளிர்கின்றது.

மனிதர்களிடத்தில் இயல்பாகவே உள்ள மனித குணங்களுடன் கீழான மிருகக்குணங்களும் மேலான தெய்வீககுணங்களும் இரண்டறக் கலந்துள்ளன. ஒருவனிடத்தில் மனித குணங்களுடன் மிருகக் குணங்கள் மிகுகையில் அவன் அசுரத்தனமாக, மிருகங்கள் போல் நடந்துகொள்கிறான். அதேசமயம் தெய்வீககுணங்கள் அதிகமாகும்போது அவன் புனிதனாக உயர்ந்த வாழ்க்கையை வாழத்தலைப்படுகிறான். இக் கருத்தை வலியுறுத்துவதாகவே மனிதனுக்குள் இருக்கக்கூடியதான முக்குணங்கள் பற்றி (ராஜசம் -மிருகக்குணம், தாமசம் - மனிதகுணம், சத்துவம் - தெய்வீககுணம்) இந்துமதம் எடுத்தியம்புகின்றது.

மனிதன் இயற்கையின் அங்கம் என்பதால், இயற்கைகூட முக்குணங்களாலானதும் ஆளப்படுவதுமாகும். மேற்கூறப்பட்ட முக்குணங்கள் மனிதனுக்கிருக்கும் குணங்களை; மட்டும் குறிப்பதல்ல. அதற்கும் அப்பால் பிரபஞ்சத்தின் பன்முகப்பட்ட படைப்புகள் தோன்றுவதற்கும் நிலைபெறுவதற்கும் அடிப்படையானவை யாகும். இவற்றாலேயே கூர்ப்பும் நடைபெறுகிறது. கூர்ப்பு என்பது படைப்பும், அதுசார்ந்த தொடர்ச்சியான விருத்தி நிலைகளும், ஆளுமையும், உடல், மனம், பிராணன் என்பவற்றின் சேர்க்கையுமாகும்.

இவற்றுக்கிடையிலான ஒருங்கிசைவற்ற தன்மைகள் ஏற்படுகையில், மனிதன் முக்குணங்களின் பிடியில் சிக்கி அல்லலுறுவதுடன் பல்வேறுவிதமான பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் - நோய்களுக்கும் முகங்கொடுக்கின்றான். யோக சாதனையே இவற்றின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்கும் கருவியாக அமைகின்றது. எனவேதான், உயர்தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு உயர்தரமான கருவியொன்று தேவை. அதுவே யோகம் என்பதாக அமைகின்றது. இதன் பின்னணியிலிருந்துதான் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியங்களும் பொதுமைப்பாடுடைய நடத்தைசார் வாழ்வியல் விழுமியங்களும் எழுச்சிபெற்றன எனக் கொள்ளலாம்.

கால, தேசவர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் இக்கலையின் சிறப்புக்கூறுகள் பற்றி நோக்குமுன், யோகம் என்ற விடயப் பரப்புப் பற்றி பூர்வாங்கமாக நோக்குவோம். பொதுவாக யோகமானது ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. "யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் 'இணைத்தல்' அல்லது 'ஒன்றுசேர்த்தல்' என்றநேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாக விளங்குகிறது.

ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்கநெறி களை - வாழ்வியல் ரீதியான விடயங்களைப் போதிக்கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிசமான இக்கலையைச் சூத்திரவடிவில் முதலில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார்.

சித்தத்தை செம்மைப்படுத்தும் போதே வாழ்க்கை சிறக்கின்றது- பூரணத்துவமடைகின்றது. வாழ்க்கை மேம்பாடடைவதற்கு இடைவிடாத யோகப் பயிற்சிகளே பெரிதும் உதவுகின்றன என இந்துசமய நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. "சித்தமலம் அறுவித்து சிவமாக்கியெனை யாண்ட அத்தன்... "என்ற திருவாசக அடிகள் மூலம் மாணிக்கவாசகர், சித்தத்தை செம்மைப்படுத்தும் போது சிவப்பேற்றை அடைய முடியும் என்கிறார். மேலும் "சித்தவிருத்தி நிரோதக" என்பது யோகத்தின் அடிப்படைக் கருத்தியல். இதனை யோகக்கலையின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி மாமுனிவர் கூட தனது யோகசூத்திரத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். யோகம் சித்தவிருத்தி களைஅழிக்கும் தன்மை வாய்ந்தது. அதாவது சித்தம் என்பது எண்ணங்களின் - சிந்தனைகளின் ஒட்டுமொத்த இருப்பிடமாகும். இது பல நிலைகளில் பலவாறு செயற்படும் தன்மையது. நான் - எனது எனும் அகங்கார, மமகாரங்களும் சேர்ந்தியங்கும் முனைப்புறுதன்மையே சித்தமாகும். இதுவே மனித வாழ்வைச் சீர்ப்படுத்தவும் சீரழிக்கவும் காரணமாகிறது.

துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையான விளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலிய பல விரும்பப்படுகின்ற நேர்மறையான சம்பவங்களுக்கெல்லாம் காரணம் மனமாகும். எனவே முதலில் ஐம்புலன்களிடமிருந்தும் மனதை பிரித்தெடுத்து எதுவும் நிலையற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது? பொய்யெது? என்றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங்களற்றதாக்குவது மிக எளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் முழுத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும். அவற்றை மனதினின்றும் அழித்தலே சித்தவிருத்தி நிரோதக... என்பதன் பொருள் விளக்கமாகும்.

யோகமானது, கோட்பாட்டு ரீதியில் - பிரயோக அடிப்படையில் நான்கு பெரும் பகுதிகளாக பிரித்து நோக்கப்படுகின்றது. அவையாவன கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜ யோகம் என்பனவாகும். இவற்றைப் பிரயோகிக்கும் வழிமுறைகள் வெவ்வேறானவை ஆகினும் அவற்றின் இறுதி இலக்கு ஒன்றே. அதாவது உண்மைத் தன்மையை - பூரணத்துவத்தை அறிந்து கொள்வதேயாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்தியயோகத்தை இராஜயோக முறைக்குள் அடக்கப்படுகிறது. யோகக் கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜ யோகமுறைக்குள்ளேயே வருகின்றன.

பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப் பிடித்த யோக முறையானது பதஞ்சலி மாமுனிவரால் யாக்கப்பெற்ற இராஜயோக முறையை அடியொற்றியதாகும். இஃது உடல், மனம், ஆன்மா. ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது, ஆன்மா விடுதலையடைந்து பேரின்ப நிலையை எய்தவேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆத்மீக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையை அடைதல் ஈறானவாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாகவிளக்குகின்றது.

இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப் பரப்பாகிய அட்டாங்கயோகம் எனும் எட்டு வகையான வாழ்வியற் படிமுறைகள் காணப்படுகிறன.

இயமம்- தீயவற்றை விட்டொழித்தல்.(கொல்லாமை, பொய் கூறாமை, களவுசெய்யாமை, காமமின்மை)

நியமம்- நன்றாற்றல். (பிறருக்கு உதவுதல், பரோபகாரம், தூய்மையுடைமை, வாய்மை, தவம் புரிதல்)

ஆசனம்- இருக்கை நிலை. (உடல் நன்நிலையடைதலுக்கான உடல்சார்ந்த பயிற்சி முறைகளை செய்தல்)

பிராணாயாமம்- சுவாசத்தை சீராக்கம் செய்தல். (பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)

பிரத்தியாகாரம் - ஐம்புலன் களையும் புறவுலகப் பொருட்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்.

தாரணை- மனதை ஒரு நிலைப்படுத்தல்.

தியானம்- மனதை கட்டுப் படுத்தி எடுத்துக்கொண்ட பொருள் மீதான உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல், தெளிதல் நிலை திரியாமனதினைப் பெறல்.

சமாதி- உணர்வொடுங்கிய நிலை. அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச) நிலை. என்பதாக யோகத்தின் எட்டு விதமான படிமுறைகளும் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது.

மனிதவாழ்வியலின் பன்முகத்தளத்தில் ஒப்புயர்வற்றதாக விளங்கும் இக்கலையின் மகத்துவத்தை தற்காலத்தில் சர்வதேசம் நன்குணர்ந்திருக்கின்றது என்பதனை நிதர்சனமாக்குவதாக உலக மக்களால் இன, மத, பேதம் கடந்து அனுசரிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச யோகா தினத்தைத் குறிப்பிடலாம். சமகாலத்தில் மேலைத்தேய நாடுகளைப் பொறுத்தவரையில் யோகக்கலையானது பரவலாக்கம் பெற்று வருகின்றமையைக் காணலாம். ஆரம்பக்கல்வி நிறுவனங்களிலிருந்து உயர் பல்கலைக்கழகங்கள் வரை இக்கலைக்கு உயரிய கௌரவம் வழங்கப்பட்டிருப்பது - வழங்கப்பட்டுவருவது இக்கலையின் பயனுறுதித்தன்மையை - சிறப்பைப் பறைசாற்றி நிற்கிறது.

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 17

# முற்றம் வேண்டாம் சிந்தித்தால் போதும் சிறந்த பலனைப் பெறலாம்

**சில** தினங்களுக்கு முன்னர் மருதனார் மடச் சந்தியைத் தாண்டியதும் செடிகள் விற்பனை நிலையம் ஒன்று தென்பட்டது. நடைபாதையில் தோன்றிய தற்காலிகக் கடை அது. அதில் பயன் தரும் மரங்களையும், செடிகளையும் அரிதாகவே கண்டேன். அழகுக்காக வளர்க்கும் எமது சூழலுக்கேற்றதைவிட மலையகக் காடுகளில் காணப்படுகின்ற விதம் விதமான மரங்களே அதிகம் காணப்பட்டது.

பலன் தரும் மரங்களைக் காட்டிலும் வெறும் அழகுக்காக மரங்களை வளர்க்கும் பழக்கம் நம்மவர்களுள் ஊடுருவியிருப்பதற்கு இது ஒரு சான்று எனலாம். எமது வாழ்க்கைச் சூழலிலே மரங்களை ஏன் வளர்க்கிறோம்? அல்லது வளர்க்க வேண்டிய முக்கிய தேவை என்ன? என்று எம்மவர்க்குப் புரியாததன் விளைவே இத்தகைய தடுமாற்றம் எனலாம்.

முதலில் எம்மைச் சுற்றி நடப்படுகின்ற மரங்களும், செடிகொடிகளும் எவ்வகையில் எமக்குப் பலன்தருகின்றன? எத்தகைய இயற்கைச் சமநிலையை எம்முள் பேணுகின்றது. அதில் காணப்படும் இயற்கை இரசாயனங்களினால் எத்தகைய நன்மையடைகிறோம்? அதன் உணவுப் பெறுமானம் என்ன? அதன் கதிர்வீச்சு என்ன? இத்தனையும் கணக்கிலெடுத்த பின்பே நாம் மரங்களை நடவேண்டும். மரம் நடுவதற்கு இடம் இல்லையே என்று அங்கலாய்க்கின்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கக் கூடிய கட்டுரையை அண்மையில் பசுமை விகடனில் படித்தேன். கட்டடங்களால் நிரம்பி வழிகின்ற சென்னை மாநகரிலே ஒரு பெண் தன் முயற்சியாக ஒரு மாடித் தோட்டத்தை அமைத்திருக்கிறார்,



அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

"மாடித் தோட்டம் என்றாலே காய்கறிகளையும், கீரை வகைகளையும் மட்டும்தான் வளர்க்க முடியும் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் கொஞ்சம் முயற்சி செய்தால் மரங்களையும் வளர்க்க முடியும்" என்று சொல்வதோடு மட்டுமல்லாது அதை நிரூபித்தும் காட்டியிருக்கிறார் சென்னையைச் சேர்ந்த லட்சுமி. அவர் கடந்த 18 ஆண்டுகளாகச் சென்னை ஜபர்கான் பேட்டை வேதாச்சலம் தெருவில் மாடித் தோட்டத்தை அமைத்துப் பராமரித்து வருகிறார். 2001 ஆம் ஆண்டு வெறும் பத்துத் தொட்டிகளை வைத்து ஆரம்பித்த அவரது தோட்டத்தில் தற்போது 200 மரங்கள் உண்டு. அந்தந்த சீசனுக்கு ஏற்றவாறு காய்கறிகளையும் பயிரிடுகிறார். கோடையில் காய்கறிகள் பயிரிடுவதில் சிரமம் உண்டு. ஜூன் மாதத்திற்குப் பின்னர் காய்கறிகளைப் பயிரிடுவேன். ஒக்ரோபர் வந்ததும் குளிர்காலம் தொடங்கிவிடும். பீன்ஸ், கரட், பீட்ரூட், காலிஃப்ளவர்னு பயிர் செய்வேன். இந்த ஏரியாவுல மாடித்தோட்டம் அமைச்ச முதல் ஆள் நான்தான். இப்போ எல்லோரும் என்கிட்ட வந்து ஆலோசனை கேட்டுட்டுப் போறாங்க" என்று முன்னுரை கொடுத்த லட்சுமி தொடர்ந்தார்.

"இங்க காய்கறிகளையும், கீரைகளையும்தான் ஆரம்பத்துல வளர்த்தேன். அப்புறமா புளியமரம், மாதுளை, கொய்யா, வாட்டர் அப்பிள்னு மரங்களையும் மாடியில் வளர்க்க ஆரம்பிச்சேன். இந்த மரங்கள், நான் நினைச்சதைவிட வேகமா வளர ஆரம்பிச்சது. வாரத்துக்கு ஒரு தடவை கொய்யா, மாதுளைனு பறிச்சிக்கிட்டிருக்கோம்.

இதுபோக செர்ரி, சப்போட்டா, மாமரம், வாழை மரம், எலுமிச்சைனு பல பழமரங்கள் இருக்கு. மூலிகைச் செடிகளும், கீரைகளும் இருக்கு. வீட்டைச் சுத்தி பசுமையான செடிகளையும், கொடி வகைகளையும் வெச்சிருக்கேன். வெளிநாட்டுச் செடிகளாக இருந்தாலும் வீட்டைச்சுத்தி இருக்குறப்போ, சுத்தமான காத்து கிடைக்குது.

"தினமும் காலையில ஆறு மணிக்கு மாடித்தோட்டத்துக்குப் போயிடுவேன். கோடைக்காலத்துல தினமும் 2 தடவை செடிகளுக்குத் தண்ணீர் கொடுப்பேன். சில நேரங்கள்ல பூவாளியில தண்ணீர் தெளிப்பேன். செடிகளை ஒவ்வொண்ணா கவனிச்சுப் பூச்சித் தாக்குதல் ஏதும் இருக்கானு பார்ப்பேன். அதேபோலப் பழுத்த இலைகளைப் பறிச்சிடுவேன். வாரத்துக்கு ஒருமுறை இயற்கைப் பூச்சிவிரட்டி, தேமோர்க் கரைசல், பெருங்காயக் கரைசல்னு தெளிப்பேன்.



கடந்த மூணு வருஷத்துக்கு முன்னாலதான் 'ஒர்கானிக் கார்டன் பவுண்டேஷன்' (ORGANIC GARDEN FOUNDATION) பத்தித் தெரிஞ்சுக்கிட்டேன். அந்தக் குழு மூலமாத்தான் எனக்கு இயற்கை இடுபொருள்களைப் பத்தி அதிகமாகத் தெரிஞ்சது. யூடியூப்ல நம்மாழ்வார் வீடியோக்களைப் பார்த்து இயற்கை முறையில இடுபொருள்களைப் பயன்படுத்த ஆரம்பிச்ச பிறகு, நல்ல பலன் கிடைச்சுருக்கு. வீட்டுல தயாரிக்க முடிஞ்ச இடுபொருள்கள் எல்லாத்தையும் நானேதான் தயாரிச்சுக்குறேன். தினமும் வீட்டுல மிச்சமாகுற காய்கறி, பழக்கழிவுகளையும் அப்படியே செடி வளர்க்குற தொட்டிகள்ல போட்டுடுவேன். அதெல்லாம் மட்கி உரமாகிடும். வேர்ப்பூச்சித் தாக்குதலைத் தவிர்க்க வேப்பம் பிண்ணாக்கு பயன்படுத்துறேன்" என்ற லட்சுமி நிறைவாக,


"ஆரம்பத்துல மாடித்தோட்டம் அமைக்கிறப்போ செலவு அதிகமா இருக்கிற மாதிரித்தான் தெரியும். ஆனால், நாள்கள் போகப்போகத்தான் அதோட பலன் நமக்குத் தெரிய ஆரம்பிக்கும். வீட்டுல இருக்கிற உடைந்த வாளிகள், பாத்திரங்களிலேயே செடிகள் வளர்க்கலாம். மாடித்தோட்டம், உடலையும், மனசையும் ஆரோக்கியமா வைக்குது. சிறந்த மாடித்தோட்டத்துக்காக 2 விருதுகள் எனக்குக் கிடைச்சுருக்கு.

இப்போ நிறைய பேர் என்கிட்ட ஆலோசனை கேட்டுத் தோட்டம் அமைக்கிறதைப் பார்க்கும்போது மனசுக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கு" என்று சொல்லி விடைகொடுத்தார்.

இந்தக் கட்டுரையைப் படித்ததும் அளவற்ற நிலமிருந்தும், அதற்கென ஒதுக்கக்கூடிய நேரம் இருந்தும் நாம் சோம்பேறிகளாக இருந்து கொண்டு பல மாதங்களுக்கு முன்னர் பறித்து இரசாயனமிட்டுப் பதப்படுத்திய பழவகைகளை அமெரிக்காவிலிருந்தும், அவுஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். கடவுள் ஒருவர் இருப்பாரோயானால் வளமிருந்தும் சிறப்புற வாழத் தெரியாதவர்களாக இருக்கிற எமது யாழ்.வாசிகளை கடைசிவரை மன்னிக்க மாட்டார் என்பதே எனது கருத்து.





'கண்ணே கலைமானே' படத்தில் வங்கி அதிகாரியாக நடித்திருக்கிறார் தமன்னா.

அவரின் நடிப்பு நதியில் விழும் பூவைப் போல நுட்பத்துடன் இருந்தது என இயக்குநர் சீனுராமசாமி பாராட்டியுள்ளார்.

சாயிஷா தற்போது 3 படங்களில் நடித்து வருகிறார். தமிழுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பேன் எனக் கூறியிருக்கிறார்.

நடனத்தில் அதீத ஆர்வம் கொண்ட அவர், நடனம் கற்பிக்கும் அக்கடமி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார். நடனம் சம்பந்தப்பட்ட படத்தில் நடிக்க வேண்டும் என்பதே விருப்பம் என்கிறார் சாயிஷா.



# முதன் முதலாக



சர்வதேச உதைபந்தாட்ட உலகில் அதிகம் பிரபல்யம் பெற்ற லீக் தொடர்களாக விளங்குவது இங்கிலாந்து பிறீமியர் லீக், ஸ்பெயினின் லாலிகா லீக், இத்தாலியின் சீரி ஏ, பிரான்ஸின் லீக் 1, ஜேர்மனியின் புண்டெலிஸ்கா போன்ற தொடர்களாகும். இதற்குக் காரணம் இதில் பங்குபற்றும் கழகங்கள் பலவும் பொருளாதார ரீதியில் செழிப்பாக இருப்பதனால் திறமை வாய்ந்த பல வீரர்களைப் பெருந்தொகைப் பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்து விடுவதுதான். உலகக் கிண்ணம் போன்ற பெருந்தொடர்களிலும் இத்தகைய லீக் தொடர்களில் விளையாடும் வீரர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதுமுண்டு.

இதனால் பொருளாதார ரீதியில் நலிவுற்ற ஏனைய லீக் கழகங்கள் இரண்டாம்தர வீரர்களை ஒப்பந்தம் செய்து தொடர்களை நடத்தி வருகின்றன. அந்த வகையில் அதிகம் பிரபலமில்லாத லீக் தொடர்களில் ஒன்றாக விளங்குவது தான் பின்லாந்து நாட்டில் நடைபெற்று வரும் விக்கஸ்லிகா லீக் தொடர். இந்நிலையில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணப்போட்டிகளில் விக்கஸ்லிகா லீக் தொடரில் பங்குபற்றும் வீரர் ஒருவர் முதன்முறையாக விளையாடிச் சாதனை படைத்துள்ளார். எகிப்து நாட்டைச் சேர்ந்த மத்திய கள வீரரான அப்துல்லா அல்சையிட், விக்கஸ்லிகா லீக் தொடரில் குப்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். இவர் உருகுவே உடனான முதற்போட்டியில் விளையாடியதன் மூலமே அந்தப் பெருமையைப் பெற்றுள்ளார்.

பின்லாந்து இதுவரை உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஒருமுறைகூடத் தெரிவானதில்லை. ஆகையால் அப்துல்லா அல்சையிட் உலகக் கிண்ணப்போட்டிகளில் விளையாடுவதை பின்லாந்து ரசிகர்கள் தமது நாட்டு வீரராகக் கருதிக் கொண்டாடி வருகின்றார்கள். இதனால் விக்கஸ்லிகா லீக் தொடரின் தரமும் உயர்வடையும் என நம்புகின்றார்கள். ஐரோப்பாவில் கிட்டத்தட்ட 55 நாடுகளில் உதைபந்தாட்ட லீக் தொடர்கள் நடைபெற்று வந்தாலும் தரவரிசைப்பட்டியலில் விக்கஸ்லிகா லீக் தொடர் 38 ஆவது இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடை



பொதுவாகவே விளையாட்டு மைதானங்களுள் பிராணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அதையும் மீறி ஏதாவது பிராணிகள் போட்டி நடைபெறும்பொழுது மைதானத்துக்குள் நுழைந்தால் போட்டியை நடத்தும் கழகத்துக்கு தண்டப்பணம் விதிக்கப்படுவதுமுண்டு. இதற்கு உதராணமாகச் சில வாரங்களுக்கு முன்னர் துருக்கியில் நடைபெற்ற பெயோர்ண் முனிச் – பெசிக்ரஸ் அணிகளுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் போட்டியின்போது மைதானத்துக்குள் எதிர்பாராதவிதமாக பூனை ஒன்று நுழைந்ததால் ஆட்டம் சில நிமிடங்கள் தடைப்பட்டிருந்தது. இதனால் பெசிக்ரஸ் அணிக்கு ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியம் தண்டப்பணம் விதித்திருந்தமையைச் சுட்டிக்காட்டலாம்.

இதை இங்கு நினைவுபடுத்தக் காரணம் தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் பொழுது கோழிகளை மைதானத்துக்குள் தங்களோடு கொண்டு செல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென நைஜீரிய ரசிகர்கள் போட்டி தொடங்குவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னதாக ஏற்பாட்டுக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

போட்டிகளின் பொழுது கோழிகளைக் கூடவே வைத்திருந்தால் அது தமக்கு அதிர்ஷ்டம் என்பதை நைஜீரிய ரசிகர்கள் உறுதியாக நம்புகின்றார்கள். அது அவர்களது வாழ்க்கையில் ஒரு பாரம்பரியமாகவே கருதப்பட்டு வருகின்றது. குறிப்பாக அவர்களது தேசியக் கொடியின் நிறம் பச்சையும் வெள்ளையும் என்பதால் போட்டியின் போது வெள்ளை நிறக்கோழிகளுக்குப் பச்சைநிறச் சாயம் பூசிக் கொண்டு வருவதற்கும் தயாராக இருந்தார்கள். ஆனாலும் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய மைதானத்துக்குள் பிராணிகளைக் கொண்டு வர அனுமதிக்க முடியாது என ஏற்பாட்டுக் குழுவினர் கூறியதால் அவர்கள் பலத்த ஏமாற்றமடைந்தனர்.

# யாரென்று தெரிகிறதா?



இர்வினின் இரண்டு புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தகுதி காண் சுற்றுப் போட்டிகள் 2005 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெற்றிருந்தது. இதன்போது அவுஸ்ரேலிய அணி உருகுவே அணியைத் தோற்கடித்து 32 வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முதன்முறையாகத் தகுதி பெற்றிருந்தது. இதன்போது 12 வயதான ஜக்சன் இர்வின் தனது மேற்சட்டையைக் கழற்றி வெற்றியைக் கொண்டாடிய புகைப்படம் அப்போதே பரவலான கவனத்தைப் பெற்றிருந்தது. தற்போது 13 வருடங்களின் பின்னர் அந்தச்சிறுவன் அவுஸ்ரேலிய அணியில் இடம் பெற்று உலகக் கிண்ணப் போட்டிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்டமை அனைவராலும் ஆச்சரியமாக நோக்கப்படுகின்றது.

தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் அவுஸ்ரேலிய அணிசார்பில் விளையாடி வருபவர் தான் 25 வயது மத்திய கள வீரரான ஜக்சன் இர்வின். மெல்பேர்னைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு பட்டதாரி ஆவார். தற்போது இங்கிலாந்து கழகமான ஹல் சிற்றிக்காக விளையாடி வரும் இர்வின் 2013 ஆம் ஆண்டு ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியம் நடத்திய 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கொட்லாந்து அணிக்கெதிராக அவுஸ்ரேலியா சார்பில் அறிமுகமானார். இந்நிலையில் வளர்ந்து வரும் வீரரான ஜக்சன்



# மாறாத தெரிவு

சென்ற வாரம் ஐ.சி.சி. நடுவர் தேர்வுக்குழுவினரின் தீர்மானத்துக்கமைய 2018 - 2019 ஆம் ஆண்டுகளுக்கான Elite Panel மற்றும் போட்டி நடுவர்கள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்ற வருடம் பணியாற்றிய அதே நடுவர் குழாமே இந்தமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இக்குழாம் அறிவிக்கப்பட்டபோது இலங்கையின குமார் தர்மசேனவை உள்வாங்கியமை சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் இம்முறை அதுபோன்ற சர்ச்சைகள் எதுவும் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் தற்போது நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையை எல்லா நாடுகளுமே ஏற்றுக்கொண்டமையாகும். இதனால் ஒப்பீட்டளவில் தவறான தீர்ப்புக்கள் முன்னரைவிடக் குறைவடைந்துள்ளன. அந்தவகையில் அறிவிக்கப்பட்ட நடுவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**Elite Panel நடுவர் குழாம்**

அலீம்டார் (பாகிஸ்தான்), சுந்தரம் ரவி (இந்தியா), குமார் தர்மசேன (இலங்கை), மரைஸ் இரஸ்மஸ் (தென்னாபிரிக்கா), கிறிஸ் கபானி (நியூசிலாந்து), இயன் குட் (இங்கிலாந்து), றிச்சட் இல்லிங்வேர்த் (இங்கிலாந்து), றிச்சட் கெற்றில்புரோ (இங்கிலாந்து), நைஜெல் லோங் (இங்கிலாந்து), புஷரூஸ் ஒக்சன்போர்ட் (அவுஸ்ரேலியா), போல் ரிபெல் (அவுஸ்ரேலியா), றொட் டக்கர் (அவுஸ்ரேலியா)

**போட்டி நடுவர் குழாம்**

ஜவகல் ஸ்ரீநாத் (இந்தியா), ரஞ்சன் மடுகல்ல (இலங்கை), டேவிட் பூன் (அவுஸ்ரேலியா), கிறிஸ் புறோட் (இங்கிலாந்து), ஜெவ் குறோ (நியூசிலாந்து), அண்டி பைகுறொவ்ற் (சிம்பாப்வே), றிச்சி றிச்சட்சன் (மேற்கிந்தியத் தீவுகள்)

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 23.06.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.